பிள்ளைப் பெருமாள் கவிராயர்

இயற்றிய

விராலிமலை
வேலவர் குறவஞ்சி

பதிப்பாசிரியர்

வே. இரா. மாதவன்

திருமண வெளியீடு

திரு. இராம. பெரி. பெரியகருப்பன் செட்டியார் மகன்

திருவளர் செல்வன்

பெரியகருப்பன் பி. இ.,

டாக்டர் வெ. தெ. மாணிக்கம் செட்டியார் மகள்

திருவளர் செல்வி

விசாலாட்சி (பி. ஏ.)

ஆகியோரின் திருமணத்தில் வழங்கப்பெற்றது.

தி. ஆ. 2014. தை 21 3-2-83

காரைக்குடி

மெய்யம்மை பதிப்பக வெளியீடு : 7

மெய்யம்மை பதிப்பகம்

திரு. வி. க. இல்லம்,
49 - ஆறு. ஆ. இராம. வீதி.,
காரைக்குடி - 623001

41 - மாசிலாமணி தெரு,
பாலாசி நகர்,
இராயப்பேட்டை,
சென்னை - 600014.

பதிப்புரை

என் மக்களின் திருமண விழாக்களில் புதியதொரு நூலினை வெளியிடுதல் என் வழக்கம். அதற்கொப்ப என் இரண்டாவது மகன் பெரிய கருப்பனின் திருமண விழாவில் ''விராலிமலை வேலவர் குறவஞ்சி'' எனும் இந்நூலினை வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

சென்னையிலுள்ள உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பண்டாரகர் ச. வே. சுப்பிரமணியனாரின் மாணவர் திரு வே. இரா. மாதவன் ஒலைச் சுவடியிலிருந்து படியெடுத்துச் சிறப்புமிக்க முன்னுரை எழுதி நன்கு பதிப்பித்துள்ளார்கள். அல்லும் பகலும் அயராது தமிழ்ப் பணி புரியும் பண்டாரகர் ச.வே. சுப்பிரமணியனார்க்கும் இந்த நூலைச் செப்பமுற அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் என உளமார்ந்த நன்றி. இந்நூலினைப் பதிப்பித்தலில் அருந் தொண்டாற்றிய திரு வே. இரா. மாதவன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

என் இரண்டாவது மகன் திருவளர் செல்வன் பெரியகருப்பன். பி. இ. க்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பண்டாரகர் திரு வெ. தெ. மாணிக்கம் செட்டியார் அவர்கள் மகள் திருவளர் செல்வி விசாலாட்சி (பி. ஏ) க்கும் 3-2-83ஆம் நாள் நடைபெறும் திருமணத்தில் இக்குறவஞ்சி நூல் வெளியிடப் பெறுகின்றது.

விராலிமலை முருகன் எல்லார்க்கும் எல்லா நலனும் அருளுவானாக!

அன்பன்,

இராம. பெரி. பெரியகருப்பன்

வாழ்த்துரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை -113

சிறந்த தமிழ் நூல்களை வெளியிட வேண்டும் என்னும் ஆர்வமும் விருப்பமும் கொண்ட மெய்யம்மை பதிப்பகத்தார், 'விராலி மலை வேலவர் குறவஞ்சி' என்னும் இந்நூலை வெளியிடுகின்றனர். இந்நன் முயற்சிக்கு என் பாராட்டுக்கள்.

திரு. வே. இரா. மாதவன் எங்கள் நிறுவனத்தில் பணி யாற்றுபவர். சிறந்த உழைப்பாளி. ஓலைச் சுவடி களிலுள்ளவற்றை நூலாக ஆக்கித் தரும் பணியில் ஈடு பட்டுள்ளார். 'கண் மருத்துவம்' என்னும் சிறந்த சித்த மருத்துவ நூல் ஒன்றினையும் 'மீனாட்சியம்மன் திருப் புகழ்' என்னும் நூலினையும் அவர் சுவடியிலிருந்து பெயர்த்தெழுதிப் பதிப்பித்துள்ளார். இவை நிறுவன வெளியீடாக வந்துள்ளன. இப்பொழுது வெளியிடப்படும் 'விராலிமலை வேலவர் குறவஞ்சி' என்னும்இந்நூலையும் அவர் சுவடியிலிருந்து பதிப்பித்துள்ளார். தக்க ஆய்வு முன்னுரையுடன் சிறப்பான முறையில் இந்நூலினைப் பதிப்பித்துள்ள திரு. வே. இரா. மாதவன் மேலும் பல நல்ல நூல்களை உருவாக்க வேண்டுமென வாழ்த்து கிறேன்.

அன்பன்,

ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

செந்தமிழ் முருகன் திருப்பெயருடன் விளங்கும் இக் குறவஞ்சி நூலைச் சுவடியிலிருந்து பதிப்பிக்கத் துணை நின்ற திருவருளை இறைஞ்சுகின்றேன்.

நாளும் தமிழ்ப் பணியால் தமிழன்னையை அணி பெறச் செய்துவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் எம், ஏ., பிஎச். டி., அவர்களின் அரும்பெரும் முயற்சியால் இந் நூல் உருப் பெறுகின்றது. இப் பதிப்பினைச் செய்யுமாறு என்னைப் பணித்த மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல பல தமிழ் நூல்களை வெளியிட்டு வரும் மெய்யம்மை பதிப்பகத்தார் இந்நூலையும் அழகுடன் வெளியிடுகின்றனர். அவர்தம் சீரிய முயற்சிக்கு என் மனமார்ந்த நன்றி.

இந்நூல் பதிப்பின் போது உதவிய திரு. பூ. சுப்பிரமணியன், எம். ஏ., பி. லிட்., பி. டி., திரு. மு. கோ. ராமன், ஆகியோருக்கும், நூலைச் சுவடியிலிருந்து படியெடுக்க உதவிய சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலாகக் காப்பாட்சியர் அவர்கட்கும் நூலைச் சிறப்புடன் அச்சிட்டளித்த நாவல் ஆர்ட் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகிறது.

அன்பன்,

வே. இரா. மாதவன்

சென்னை - 600 113
21 - 1 - 1983

உள்ளே

முன்னுரை

உலகின் நிலப்பரப்பில் தொன்மைச் சிறப்புடையது குறிஞ்சி நிலம். உயர்ந்த மலைகளும் சோலைகளும் நிறைந்த இந்நிலப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வியல் இயற்கையோடியைந்தது அழகுணர்வும் ஆற்றலும் மிக்க இந்நில மக்கள் அழகையே தெய்வமாகக் கொண்டனர். அழகும் ஆற்றலும் மிக்க முருகக் கடவுளே குறிஞ்சிநிலத் தெய்வமாகும்.[1]

'சேயோன் மேய மைவரை உலகமும்' என்னும் தொல்காப்பிய மொழி, அதற்கும் முன்பே இத்தெய்வ வழிபாடு வழங்கப் பட்டமையை விளக்கும். முருகன் பற்றியப்புராணச் செய்திகள் பல பின்வந்த நூல்களுக்கு வித்தாக அமைந்தன. அறுபடை வீடு வரலாறுகளும், அவன் குன்றுதோறும் ஆடிய பெருமையைக் குறிப்பாகச் சுட்டும் நூல்களும் பல உள. அவற்றுள், நூலாக வெளிவந்தவை சில. இன்னும் தனி நூலாக அச்சிடப்படாது. சுவடி வடிவிலேயே பல நூல்கள் கிடைக்கின்றன. 'விராலிமலை வேலவர் குறவஞ்சி' என்னும் இந்நூல் சுவடியிலிருந்து பெயர்த் தெழுதப் பெற்றுத் தனி நூலாகப் பதிப்பிக்கப்படுகிறது.

சுவடி பற்றிய செய்திகள்:

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 'விராலி மலை வேலவர் குறவஞ்சி' என்னும் பெயரில் இந்நூல் சுவடி வடிவிலுள்ளது. ஓலைச்சுவடியில் (R. 5033) மொத்தம் 32 ஏடுகள் உள்ளன. ஏடுகள் ஒவ்வொன்றும் 34 5 செ. மீ நீளமும், 2.5 செ. மீ அகலமும் கொண்டது. ஏடுகள் சில இடையில் முறை மாறியும், சில ஒடிந்தும் உள்ளன பல ஏடுகளின் இடையிடையே சிதலமா யுள்ளது. ஏட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் ஆறு அல்லது ஏழு

---

1. தொல். பொரு. அகத். 5

வரிகள் எழுதப்பட்டுள்ளன: தனி ஏடு ஒன்றில் 'குறவஞ்சி நாடகம்' என இடது புற ஓரத்தில் குறிப்பிடப்பட்டு, முதல் காப்புச் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. அதனை அடுத்து பாடல்கள் தொடர்ச்சியாக உள்ளன. பாடல்களுக்கு எண்கள் எழுதப்படவில்லை. இந்நூலினை அடுத்து 'வராகி மாலை' என்னும் நூலும் சில ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. இது ஒரு குறைப் பிரதியே. இதனை அடுத்து சில ஏடுகள் எழுதப்படாமல் வெற்றேடுகளாகவே சேர்த்துக் கட்டி வைக்கப்பட்டுள்ளன.

நூலின் முற்பகுதியில் 'விராலிமலை சுப்பிரமணிய சுவாமி பேரில் குறவஞ்சி நாடகம்' எனத் தனியே எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் இன்னார்எனக் குறிக்கப்படவில்லை. ஆயினும் 'செவ்வூர் வடுமு வைத்யலிங்கக் கவிராயர்' என்னும் பெயர் ஒரு ஏட்டில் பெரிதாக எழுதப்பட்டுள்ளது. நூலினுள்ளே கிடைக்கும் இந்நூலாசிரியர் பெயருடன் இப்பெயர் பொருந்தாததால் இவர் வேறொருவர் எனத் தெளிவாகிறது. இவர் ஏடு எழுதியவராகவோ அல்லது ஏட்டின் உரிமையாளராகவோ இருக்கலாம்.

ஓலைச் சுவடியிலுள்ள எழுத்துக்கள் மிகச் சிறியவை. அழகுடன் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், பல எழுத்துக்கள் சிதைந்துள்ளன. மேற்கண்ட சுவடியிலிருந்து படியெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ள காகிதச் சுவடி ஒன்றும் இந்நூலகத்தில் உள்ளது (R. 5731). இது 1955 ஆம் ஆண்டு பிரதி செய்யப்பட்டதாகும். ஓலைச் சுவடியிலுள்ளதை அப்படியே எழுதும் முறையில் இது எழுதப்பட்டுள்ளது. தற்போது இது ஒரு தனி நூலாகப் பதிப்பிக்கப்படுகிறது.

பதிப்பில் நிகழ்ந்தவை:-

சுவடி பதிப்பித்தல் ஒரு கலை. இதனுள் பல்வேறு கூறுகளும் அடங்கும். சுவடியைத் தேர்ந்தெடுத்தல், படியெடுத்தல், பாட வேறுபாடு, சுவடி வேறுபாடு, எழுத்து மாற்றம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவற்றுடன் ஏடு எழுதுவோர் செய்யும் பிழை போன்றவையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளன.

பிழைகள்:

ஓலைச்சுவடியில் பாடல்கள் அடிவரையறையில்லாமல் உரை நடை போலவே தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. ஒற்று எழுத்துகளுக்கு புள்ளி இல்லாமலும் (கநதா-கந்தர்), ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பெழுத்துக்களினிடையே வேறுபாடு இல்லா

மலும் (மொகன—மோகன்) எழுதப்பட்டுள்ளன. ா-ர-ற இவற்றி னிடையே வேறுபாடின்றியும், மாறுதலுடனும் அமைந்துள்ளன. (பிறவநதம—பிரபந்தம்). 'ற்ற' என வருமிடங்களில் 'த்த' என்றும் இவை மாற்றம் பெற்றும் பல இடங்களில் உள்ளன. (வெததி—வெற்றி). ண-ன, ன- ந இவை ஒன்றற் கொன்று மயக்கம் தரும் வகையில் எழுதப்பட்டுள்ளன. (மானதியான—மாநதியான்). 'கள்' என்னும் விகுதி 'யள்' என்றே எழுதப்பட்டுள்ளது. 'வேலர்க்கு' என்பது 'வேலறகு' என்றே எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு பாடலிலும் காணப்படும் பிழைகளைத் திருத்தி, பொருள் மாறுபடாத வகையில் அமைத்துள்ளேன்.

நூல்பெயர்:- விராலி மலை வேலவர் என்னும் தொடர் நூல் முழுதும் அடிக்கடி கூறப்படுவதால் இதுவே நூல்பெயராக அமைவது பொருத்தமுடையதாகிறது.

உள்தலைப்பு:- சுவடியிலுள்ள உள்தலைப்புகளை அப்படியே அமைத்தும், தேவையான சிலவற்றைச் சேர்த்தெழுதி அடைப்புக் குறிக்குள்ளும் அமைத்துள்ளேன். விடுபட்டுள்ள சில எழுத்துக் களையும் சொற்களையும் இவ்வாறே அடைப்புக் குறிக்குள் அமைத்துள்ளேன்.

நூலில் காணப்படும் வடமொழி எழுத்துக்கள் (ஸ், ஷ, போன்றவை) சிலவற்றை அப்படியே அமைத்துள்ளேன்.

பாடல் ஒவ்வொன்றிற்கும் தொடர்எண்களை அளித்துள்ளேன் கண்ணிகளும், பாடல் அடிகள் சிலவும் இவ்வாறே எண் பெறு கின்றன.

குறிப்புரை:-

இக் குறவஞ்சி நூல் மிக எளிய நடையிலானது. யாவரும் எளிதில் அறிந்து மகிழத் தக்கது. எனவே, விரிவான விளக்கவுரை கள் தரப்படவில்லை. ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் அங்கங்கே குறிப்புரைகளை அடிக்குறிப்பில் கொடுத்துள்ளேன்.

நூலாசிரியர்:—

இந்நூலாசிரியர், குழுமூர் நகரில் கங்கை குலத்தைச் சேர்ந்த குழைந்தை வேலய்யன் என்பவரின் திருமகனான பிள்ளைப் பெருமாள் கவிராயர் என்பது இந்நூலின் அகச்செய்தியால் பெறப்படுகிறது.

'நலந்திகழ் குழுமூர் நகர்தனில் கங்கை
குலந்தனில் வந்தக் குழந்தைவே லய்யன்
தருமா தவத்தில் தழைத்திடும் பிள்ளைப்
பெருமா ளுகந்து பிரபல முடனே
கூறிய வின்பக் குறவஞ்சி' (6)

என்னும் பாடலடிகள் இதை விளக்கும். இவரின் தமிழ் மொழிப் பயிற்சியும் விராலிமலை வேலவர் மீது கொண்ட அளவிலாப் பற்றும் இந்நூல் முழுதும் காணலாம்.

கந்தவேள் முருகன் மீதுக் காதல் கொண்ட மோகினிப் பெண்ணின் கதையைக் கற்றாரும் கல்லாருங் கேட்டுப் பொருளும் இசையும் எளிதாகத் தெரியும்படி குறவஞ்சியாக அமைத்துதவி யுள்ள ஆசிரியரின் புலமைச் சிறப்பு பாராட்டற்குரியது.

விராலிமலை திருத்தலச் சிறப்பு

விராலிமலை என்னும் திருத்தலம் திருச்சியிலிருந்து மதுரைக் குச் செல்லும் சாலையில் சுமார் பதினெட்டு மைல் தொலைவில் உள்ளது. இதற்குப் புகை வண்டி நிலையம் உள்ளது. புதுக் கோட்டைக்கு வடமேற்கு 25 மைல் தொலைவிலுள்ளது.

இது, மலைவளம், நீர்வள நிலவளங்கள் போன்ற பல்வகை வளங்களுஞ் செறிந்தது. காண்போர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரத்தக்க எழில் வாய்ந்தது. முத்தமிழ்த் தெய்வமாகிய முருகன் எழுந்தருளியிருக்கும் பேறு பெற்றது.

இம்மலையில் சோலைகள் நெருக்கமாக அமைந்துள்ளன. சோலைகள் உள்ளவிடத்தில் மயில்களும் இருப்பதுஇயல்பு. எனவே, இம்மலைச் சோலைகளில் ஏராளமான மயில்கள் வாழ்கின்றதை இன்றும் காணலாம்.

பெயர்க் காரணம்

முனிவர்கள் இம்மலையில் குராமரங்கள் உருவில் மரங் களோடு விராவி இருந்து முருகப் பெருமானை வழிபட்டதால் இம்மலைக்கு 'விரவி மலை' என்ற பெயர் உண்டாயிற்று என்பர். முதலில் விராவி மலை என வழங்கிப் பின்னர் விராலிமலை என வழங்கியிருக்கக் கூடும் எனக் கருதலாகும்.[1] விராலி (விலாரி)

1. புலவர் சி. முத்துப் பிள்ளை – முருகன் உறை விடங்கள் பக். 98.

என்னும் மரவகை கூட்டமாக வளரக் கூடியது. இது விறகாகவும் மற்ற மரவேலைகளுக்கும் பயன்படும். இவைப் போன்ற மரங்கள் நிறைந்திருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது என்றும் கொள்ளலாம் ஆயினும், முன் கூறிய காரணமே இலக்கியச் சான்றுகளுடன் கூடிய தாகக் காணப்படுகிறது.

கோனாடு சூழ் விராலி

தமிழ் முருகனின் தனிப்பெருங் கருணையைத் தித்திக்கும் திருப்புகழால் பாடி, மகிழ்ந்து, பேறு பெற்ற அருணகிரிநாதர் இத்திருத்தலத்தின் சிறப்பினை வெகுவாகப் போற்றுகிறார். 'கோனாடு சூழ்விராலி மலையுறை பெருமாளே'[1] என இவர் கோனாட்டைக் குறிப்பிடுகிறார். கோனாடு என்பது எறும்பீசர் மலைக்கு மேற்கு; மதிற்கரைக்குக் கிழக்கு; காவிரிநதிக்குத் தெற்கு; பிரான்மலைக்கு வடக்கு இந்நான்கு எல்லைக்கு உட்பட்டநாட்டுப் பகுதியிலேயே விராலிமலை அமைந்துள்ளது.

அருணகிரியார் காட்டும் அழகு காட்சிகள்

கூதளம், கடப்பம், சுரபுன்னை போன்ற மலர்களின்மீது மொய்த்துப் பண் சாதாரி (பந்துவராளி ராகம்), தேசி (தேசி ராகம்), நாமக்கிரியை (நாதநமக்கிரியை) முதலான ஆடம்பர மான நாதங்களை, ஒலி இசைகளைப் பாடும் வண்டுகள் நிறைந்த சோலைகளும், நிரம்ப ஆரல் மீன்களை ஆய்ந்துதேடும் நாரைகள் பொருந்திய காட்டாறு பாய்கின்ற ஏரிகளும் வயல்களும் நெருக்க மாயுள்ள கோனாடு என்னும் பகுதியிலுள்ளதே இவ்விராலி மலையாகும்.

> "கூதாள நீப நாக மலர்மிசை
> சாதாரி தேசி நாமக் கிரியைமுதல்
> கோலால நாத கீத மதுகர மடர்சோலை
> கூராரல் தேடு நாரை மருவிய
> கானாறு பாயு மேரி வயல்பயில்
> கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.[2]"

என்பது பாடல்

குரா, அகில் போன்ற மரங்கள் அடர்ந்திருக்கின்றன. மூங்கி லின்மேல் நின்று மயில்கள் ஆட, இனிப்புள்ள மதுவை உண்டு கரிய

---

1. திருப்புகழ் 350.
2. திருப்புகழ்-351.

வண்டுகள் பாட, கொன்றை மரமானது பொன்னை வீசுகின்றன. இத்தகு சிறப்புகளைக் கொண்டது விராலிமலை,

"விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிமலை ராஜதப் பெருமாளே"[1]

"விண்டு மேல்மயீ லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்சு வீசுவி ராலி மலையுறை பெருமாளே"[2]

என்னும் பாடல் அடிகள் இதை விளக்கும்.

மேலும், குளிர்ந்த சோலைகள் வானத்தை அளாவி உயர்ந்து வளர்ந்து பச்சென்ற நிறத்துடன் தழைத்து, நாள்தோறும் விடாமல் மழை பெய்வதால், பல நீர்ப்பூக்கள் தடாகங்களில் நிரம்பி மலரும். மகரந்தப் பொடி விரியும் கொன்றை, சுரபுன்னை மகிழ மரம் இவைகள் கற்பக விருஷங்கள் என்னும் படியாக நிறைந் திருக்கின்றன.

"படாத குளிர்சோலை யண்ட மளாவியுயர் வாய்வ ளர்ந்து
பசேலெனவு மேத ழைந்து தினமேதான்
விடாதுமழை மாரி சிந்த அநேகமலர் வாவி பொங்கு
விராலிமலை மீது கந்த பெருமாளே.[3]"

"சோலை செறிவுளவி ராலி நகரில்வளர்
தோகை மயிலுலவு தம்பிரானே."

"தாதவிழ் கடுக்கை நாக மகிழ்கற்ப
தாருவென மெத்தி யவிராலி"[5]

என்னும் பாடலடிகள் விராலிமலையின் இயற்கை வளத்தைக் காட்டுகின்றன.

முனிவர்கள் முருகப்பெருமானை விராலி மலையில் இருமருங் கும் சூழ்ந்து நின்று வழிபடுகின்றனர் என்பதை அருணகிரியார் பலவாறு சுட்டிக் காட்டுகிறார்.

---

1. திருப்புகழ்-353
2. ,, -357
3. ,, -361
4. ,, -365
5. ,, -915

"வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யாசை மாதி முறுகுகல் முழை கூடும்"[1]

என்னும் பாடலடிகள் இதற்குச் சான்றாகும்.

அருணகிரியார் பெற்ற அருட்காட்சி

இவ்வாறு முனிவர்கள் சூழ்ந்து வணங்கும் விராலி மலையைக் கேள்வியுற்ற அருணகிரியார், தம் இளமைப் பருவத்திலேயே இத்திருத்தலத்திற்கு வரும்படியாக முருகனால் ஆட்கொள்ளப் பட்டு, அவ்வாறே அவருக்கு அருள்கிட்டியதைத் தம் திருப்புகழால் விரித்தோதுகிறார். வாலிப வயதில் வயலூரிலிருந்த தன்னை விராலிமலை வேலவர் வரவழைத்த செய்தியை இவர் பலவாறு பாராட்டுகிறார்.

"தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பி லடியேனைத்
தாதவிழ் கடுக்கை நாக மகிழ்கற்ப
தாருவென மெத்தி யவிராலி
மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவென அழைத்தென் மனதாசை
மாசினை யறுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே"[2]

"அத்திறல ணங்குசெய சத்திவிடு கந்ததிரு
வயலியி லடிமைய குடிமை யினலற
மயலொடு மலமற அரிய பெரியதி
ருப்புகழ் விளம்புவென்மு னற்புதமெ ழுந்தருள்குக
விராலி மலையுறை குரவ"[3]

"மதியணையுஞ் சோலை யார்த்து மதிவள சந்தான கோட்டின்
வழியருளின் பேறு காட்டி யவிராலி
மலை மருவும் பாதி யேற்றி கடிகமழ்சந் தானகோட்டில்
வழியருளின் பேறு காட்டு பெருமாளே."[4]

என்னும் பாடலடிகள் அருணகிரியாரின் கண் முன்னே தோன்றிய அற்புதக் காட்சிகளை நமக்கு அளிக்கின்றன.

இவ் வரலாற்றை விளக்கும் வகையில் மலைக் கோயிலுக்குச் செல்லும் வழியில் மலை மீதுள்ள சந்தனக் கோட்டம் என்னும்

---

1. திருப்புகழ்-357
2. ,, -915
3. திருப்புகழ்-354
4. ,, -356

மண்டபத்தில் உள்ள தூண்களில் முருகப் பெருமான், அருணகிரி நாதர் சிற்பங்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

திருக்கோயில் அமைப்பு:-

நகரின் நடுவில் மலை அமைந்துள்ளது. விராலிமலையின் உச்சியில் முருகன் திருக்கோயில் அமைந்துள்ளது. மலைப் பாதையிலுள்ள படிக்கட்டுகளின் இடையிடையே மண்டபங்களும் அமைந்துள்ளன.

மலையடி வாரத்திலுள்ள மெய்க் கண்ணுடையாள் என்ற அம்மனை வழிபட்ட பின்னரே மலைக் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

மலையேறிச் செல்லும் வழியில் இடும்பன் சன்னதி, மீனாட்சி சுந்தரேசுவரர் சன்னதி, சந்தனக் கோட்டம் என்ற மண்டபம் இவை குறிப்பிடத்தக்கன.

இவ்வாறே, காசி விசுவநாதர், விசாலாட்சி சன்னதிகளும், கணபதி பிள்ளையார், தட்சிணா மூர்த்தி, அகத்தியர், அருணகிரி நாதர் சன்னதிகளும் சிறப்புடையன.

ஆறுமுகப் பெருமான்:-

முருகப் பெருமான் ஆறுமுகமும் பன்னிரு தோளும் கொண்டு மயில் மீது அமர்ந்து அழகு வடிவாகக் காட்சியளிக்கின்றார். வள்ளி, தேவயானை இவர்களுடன் கூடிய முருகன் திருக்கோலத்தை இக்கோயில் கருவறையில் கண்டு களிக்கலாம்.

சிறப்பு மிகு விழாக்கள்:-

வைகாசி விசாகம், தைப்பூசம், ஐப்பசி சஷ்டி, சித்திரை மாத முதல் பதினோரு நாட்கள் பூச்சொரிதல் விழா போன்ற விழாக்கள் இத்திருத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

வேலவர் – பெயர்க் காரணம்:-

முருகன், குமரன், சுப்பிரமணியன், ஞான பண்டிதன், சுவாமி நாதன் எனப் பல பெயர்களுடன் விளங்கும் கந்த பெருமான், வேலவன், வேலாயுதன் எனவும் அழைக்கப் பெறுவர். வேல் என்னும் படைக் கருவியைத் தன்னிடத்தே கொண்டதால் இப்பெயர் தோன்றலாயிற்று.

வேலாயுதன் என்பதற்கு ஞான சத்திதரன், முருகக் கடவுள் என்பது பொருள். வேலாவது சத்தியின் கூட்டம், அது மூன்று சதுஷ் கோணங்களாற் குறிக்கப்படும். இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்னும் மூன்றன் பர சொரூபம் முக்கோணமாகவும்' அவற்றின் அபரசொரூபம் அந்த முக்கோணத்தின் பாத கோண

மிரண்டையும் ஆதாரமாகக் கொண்டு முக் கோணமாகவும் விரிந்து இரண்டுங்கூடி நாற்கோணமாகும். அந்த அதோமுக முக்கோணத்தின் நுனியினின்றும் பின்னும் அந்தச் சக்திகள் தம்முள் மாறி, இச்சையிற் கிரியை, கிரியையில் ஞானம், ஞானத்திலிச்சை எனக்கூடித் திரிகோணமாகும். அந்தத் திரி கோண பாதத்திலிருந்து அபர சொரூபமாகிய முக்கோண முதிக்கும். அவையிரண்டுங்கூடி மத்திய சதுஷ்கோணமாகும். அதன் அதோமுக கோணத்தினின்றும் மீளவும் அந்தச் சக்திகள் தம்முன் மாறிக்கூடி முக்கோணமாகும், அதினின்றும் பின்னும் முக்கோண மாகக்கூடிச் சதுஷ் கோணமாகும். இந்த மூன்று நாற்கோணங் களுமே வேலாயுதமாம்.

முதற் சதுஷ்கோணத்தில், இச்சா சக்தியும், மத்திய சதுஷ் கோணத்தில் ஞானசக்தியும், பாத சதுஷ்கோணத்தில் கிரியா சக்தியும் உதித்து நிற்கும் இந்தச் சக்திகளையெல்லாம் ஆயுதமாகக் கொண்ட கடவுள் என்பதே வேலாயுதன் என்னுஞ் சொற்குப் பொருளாம்.[1]

கந்தனைக் கதிர்வேலவன் என்றும் அழைப்பர். சூரியன் போன்ற சுயப்பிரகாசம் உடையது எதுவோ அது கதிர் வீசுகிறது. இருளை நீக்கும் இயல்பு அதற்குண்டு. சுயப்பிரகாசப் பொருளிடத்து இருளைக் காண முடியாது. மேலும், சூரியன் போன்ற சுயப் பிரகாசமான வஸ்து எப்பொழுதாவது எங்கேயாவது இருளைக் காணவே முடியாது. ஞானம் யாண்டும் சுயப் பிரகாசமானது. சுப்பிரமணியன் ஞான சொரூபி. ஞான சக்தியே வடிவெடுத்தவன் அவன். வேலாயுதன் என்பது அவன் பெயர். கேடுகள் அனைத்திற்கும் அடிப்படையாயிருப்பது அக்ஞானம். அக்ஞான அந்த காரத்தை அகற்ற வல்லது ஞானச்சுடர். வெற்றிவேல் உற்ற துணை என்று இயம்புங்கால் ஞானத்தின் சிறப்பு சிகரத்தில் வைக்கப்படுகிறது. கதிர் வேலவன் ஞான பண்டிதன் ஆகிறான். வேல் முருகனும் ஞான சக்தியும் ஒன்று[2] என்பதே அறிஞர் வாக்காகும்.

குறவஞ்சி இலக்கியம்:-

முத்தமிழில் ஒரு கூறான நாடக இலக்கியத்திற்கு இக்காலத்தில் சான்றாக விளங்குபவை குறவஞ்சி இலக்கியம், பள்ளு இலக்கியம், நொண்டி நாடகம் ஆகியன. இவற்றுள், குறவஞ்சி இலக்கியம் என்பது பாட்டுடைத் தலைவனை அவனது உலாவின் போது

---

1. அபிதான சிந்தாமணி.
2. சுவாமி சித்பவானந்தர் - கடவுளின் வடிவங்கள். பக். 98

கண்டு காதல் கொண்டு விரகவேதனையால் வாடித் தவிக்கும் தலைவியொருத்திக்குக் குறக் குலத்தைச் சேர்ந்த வஞ்சியொருத்திக் குறி கூறுவதாக வரும் பொருளமைதியைக் கொண்டதாகும்.[1]

குறவஞ்சி, பிற்காலத்தில் தனியொரு சிற்றிலக்கிய வகையாக எழுதற்கு முன்னரே, இதன் இலக்கியக் கூறுகள் தொல்காப்பியம் முதலான நூல்களில் பல்கிப் பரந்துள்ளன.

''கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்''[2]

என்பது நூற்பா.

இவற்றுள் 'கட்டு' என்பது நெல்லை வைத்துக் கொண்டும், 'கழங்கு' என்பது கழங்காடும் காய்களை வைத்துக் கொண்டும் தெய்வங்களைப் பாடி, கட்டுவிச்சி கூறும் குறி வகைகளாகும். இக் குறிகளைக் காண்பவளுக்குக் கட்டுவிச்சி என்பது பெயர். இவளைக் குறுந்தொகை, 'அகவன் மகள்' எனக் குறிப்பிடுகிறது. இவ் அகவன் மகளிர் பற்றியும், இவர்கள் காணும் குறிவகைகள் பற்றியும், சங்க இலக்கியங்களிலும்,[3] பெருங்கதை முதலான காப்பியங்களிலும்,[4] பிற்கால பக்தி இலக்கியங்களிலும்[5] விரிவான செய்திகளைக் காணலாம்.

குறத்திப் பாட்டு

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் 'குறவஞ்சி இலக்கியம் சேர்க்கப்படவில்லை. ஆயினும், குறத்திப் பாட்டு என்னும் ஓர் இலக்கியம் இவற்றுள் அடங்கும்.

''இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே''[6]

''குறத்திப் பாட்டும் அதனோ ரற்றே''[7]

என்பது பன்னிரு பாட்டியல் நூற்பா.

---

1. ந.வீ, செயராமன் - சிற்றிலக்கியச் செல்வங்கள். பக். 167.
2. தொல். கள. 25.
3. நற். 288, குறுந். 23,298. அகம் . 154,208, குறிஞ்சிப் பாட்டு-7.
4. பெருங் கதை. கா.37 235-7
5. திவ்ய பிரபந்தம் - சிறி திரு. 20-22
   திருக்கோவையார் - 283-86.
6. பன். பாட்டியல். சூத். 217
7. ,, ,, ,, 218

குறத்திக் குறி கூறுவது என்னும் பொருளமைதியைப் பத்துச் செய்யுட்களால் இயன்றது குறத்திப் பாட்டு என்னும் இலக்கிய மாகும். குறத்திப்பாட்டு அமைப்பு நிலையில் குறவஞ்சியினின்றும் வேறுபட்டது. ஆயினும்,பொருளமைதியில் இரண்டும் ஒத்தது என லாம். குறிப்பாக நோக்குமிடத்து, குறத்திப் பாட்டே, குறவஞ்சி இலக்கியப் பொருளமைதிக்குக் கருவாக விளங்குகின்றது.

குளுவ நாடகம்

குறவன் குறத்தி இவர்களது வாழ்க்கையை நாடக பாணியில் விரித்துக் கூறுவது. குறவஞ்சி இலக்கியங்களுக்குப் பின்னர் எழுந்த அருகிய நாடக இலக்கியமே குளுவ நாடகம்.

குறவஞ்சிப் பெண்

குறவஞ்சி என்பதன் பொருள் குறப்பெண் என்பதாகும். குறிஞ்சி நிலப் பெண்கள் கொடிச்சியர் எனப் பெற்றனர். கொடி போன்ற இடை உடையவர் 'கொடிச்சியர்' எனப்பட்டனர். வஞ்சி என்பதற்கும் கொடி என்பதே பொருள்,

குறப்பெண், அல்லது குறிஞ்சி நிலப் பெண் எனப் பொருள் தரும் குறவஞ்சி' என்றும் பெயர் தனி இலக்கிய வகையினுக்கும் பெயராக அமைகிறது. இது இவ்விலக்கியத்தில் குறிஞ்சி நிலப் பெண்ணுக்குரிய சிறப்பிடத்தைக் கருத்தில் கொண்டளித்த குறியீடே.

நூல் பெயர் பெறும் முறை

பெரும்பாலான குறவஞ்சி இலக்கியங்கள் பின்வரும் மூன்று அடிப்படை நிலைகளில் பெயர் பெறுகின்றன.

1. பாட்டுடைத் தலைவன் அல்லது தலைவியின் பெயரோடு சார்ந்து வருவது (பொய்யா மொழியீசர் குறவஞ்சிபோன்றன)
2. பாட்டுடைத் தலைவனின் ஊர்ப் பெயரோடு சார்ந்து வருவது (சிதம்பரக் குறவஞ்சி போன்றன)
3. பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயர், இயற்பெயர் ஆகிய இரண்டோடும் சார்ந்து வருவது (சேற்றூர் முத்துச் சாமித் துரை குறவஞ்சி போன்றன)

இப்பகுப்பு முறையில் அடங்காது, ஞானக் குறவஞ்சி தத்துவக் குறவஞ்சி போன்றவையும் சிறுபான்மை உள.

பொருளும் அமைப்பும்

குறவஞ்சி இலக்கியங்கள் அனைத்தும் ஒரே கருப் பொருளைக் கொண்டுள்ளன. ஆயினும், அமைப்பு முறையில் சில வேறுபாடு

கள் உள்ளன. சைவம், வைணவம், கிறித்துவம் ஆகிய மும்மதக் கடவுளரையும், அரசரையும், வள்ளல்களையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு எழுந்துள்ளன. பொது நிலையில், கீழ்த் தள மக்களின் வாழ்வியலைச் சுவையோடு, நாடகப் போக்கில் உரைக்கும் இவை சொல்லழகும் பொருளழகும் நிரம்பியவை, கற்றுச் சுவைத்தற்குரிவை.

ஆற்றுப்படை, கோவை, உலா, தூது, குறத்திப் பாட்டு, கலம்பகம், ஏசல் போன்ற பிற இலக்கியக் கூறுகளும் இக்குறவஞ்சி நூல்களில் காணப்படுகின்றன.

பரிசு பெற்ற கலைஞன் நிலையிலுள்ள குறத்தி, பாட்டுடைத் தலைவனின் சிறப்பியல்புகளைத் தலைவிக்கு எடுத்துக் கூறி அவளை வழிப்படுத்துகிறாள். இது ஆற்றுப் படையை யொக்கும்

குறவஞ்சி இலக்கியத்தின் முற்பகுதி பேரின்பத்தை—தெய்வீகக் காதலை வெளிப்படுத்துவதாக அமைய, பிற்பகுதி, குறவன் குறத்தியின் காதலை, சிற்றின்பத்தைக் காட்டுவதாக அமை கின்றது. இது ஆன்மா இறைவனைத் தேடுதல் என்னும் கோவை நூல்களின் உள்ளுறையை ஒக்கும்.

தலைவி, பாட்டுடைத் தலைவன் மீது காதல் கொள்வதற்குத் தக்க சூழ்நிலையை அமைத்துத் தருவது அத்தலைவனின் பவனி வருகையேயாம். உலா நூல்களில் தலைவனின் பவனி கண்டு காதலுறும் மகளிரின் செயலோடு இதை ஓரளவு ஒப்புமைப் படுத்த லாம்.

காதல் கொண்ட தலைவனின் மாலை வாங்கி வரும்படியாக அஞ்சுகத்தையும். குயிலையும் தன் தோழியையும் தலைவனிடம் தூது விடுக்கும் பாங்கையும் இக்குறவஞ்சி நூல்களில் காணலாம்.

கலம்பக உறுப்புக்களில் ஒன்றான 'குறம்' என்பதே குறவஞ்சி இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைத்தது எனலாம்.

முதல் நூல்

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டளவில் திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றிய திருக்குற்றாலக் குறவஞ்சியே முதல் குறவஞ்சி நூலாகும். இது காலத்தாலும் சுவையாலும் நடை நயத்தாலும் முதன்மை பெற்றது. இந்நூலைப் பின்பற்றியே பின்வந்த குறவஞ்சி நூல்கள் சிற்சில மாற்றங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன

குறிஞ்சியும் குறவஞ்சியும்

குறிஞ்சி நிலக் கடவுள் முருகன். குறவஞ்சி நூலில் சிறப்பிடம் பெறும் குறவஞ்சியும் குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்தவள். எனவே,

குறிஞ்சி நிலஞ் சேர்ந்த குறவஞ்சி நூல்கள் சிறப்புடையன என்பது தெளிவு.

விராலிமலை வேலவர் குறவஞ்சி — கதையமைப்பு

கணபதி, சிவன், திருமால் வணக்கத்தோடு நூல் தொடங்கு கிறது. அடுத்து நாடகத்தின் தொடக்கத்தில் பாடப்படும் தோடயம் என்னும் பகுதி பல தெய்வங்களைப் போற்றும் முறை யில் (கணபதி, சத்தி, திருமால், வீரவாகு தேவர்) அமைந்துள்ளது அடுத்து மங்களம் அமைந்துள்ளது. ஆசிரியர் அகவற் பாவில் பாட்டுடைத் தலைவனாகிய விராலிமலை வேலவரின் தசாங்கச் சிறப்பை விளக்கிக் கூறி குறவஞ்சி என்னும் இந்நூலைப் பாடுவ தாகக் கூறுகிறார். கட்டியக்காரன் 'பராக்' சொல்லி வருகிறான். வேலவர் பவனி முன்பாக மோகனப் பாங்கி வருகிறாள். வால மோகினியாள் என்னும் பெயர் கொண்ட தலைவி வருகிறாள். அவளது விரக தாபம் கூறப்படுகிறது.

தலைவி விராலிமலை வேலவர் திருக்கோலங் கண்டு காதலால் உந்தப்பட்டு மயங்கி வருந்துகிறாள். மாலை நேரத்து எழுந்த சந்திரனைக் கண்டு தன் சிந்தையில் தோன்றிய துயரங்களைச் சொல்கிறாள். மலைத் தென்றல் எழுந்து வந்தது கண்டு மனத் தினில் துயரம் மிகக் கொள்கிறாள். வீசும் தென்றலை ஏசுகிறாள். கூவும் குயிலையும் நிந்திக்கிறாள். மன்மதனுடைய முரசாக விளங்கும் அலைகடலைக் கண்டு புலம்புகிறாள். பொங்கிய மயலால் கொங்கை யிரண்டும் மீறியும் மங்கை மோகினியாள் மன்ம தனைத் தூற்றுகிறாள். தலைவி தன் அருகே கண்ட ஓதிமம், அஞ்சுகம். குயில். வண்டு இவற்றையும் அழைத்துத் தன் நிலை கூறி, தலைவனின் மாலை வாங்கித் தர வேண்டுகிறாள்.

தலைவி தன் துயரைத் தோழியிடம் கூறுகிறாள். தோழி தேற்றுகிறாள்.

குறத்தி வருகை

விராலியங்கிரி .வாசனுடைய வாசலின் வளமை யெல்லாம் நேசமாய் சொல்லி வருகிறாள், குறத்தி. தோழி, மோகினிப் பெண்ணுக்குக் குறத்தியை அறிமுகப் படுத்துகிறாள்.

தலைவி, குறத்தியை அழைத்து, குறத்தியின் சாதிவளம், மலைவளம், விராலிமலையின் மகிமை, குறத்தி கண்ட தேசங்கள், தலங்கள், விராலி நாட்டு வளம், நதிவளம், வித்தைகள், குறி சொல்லிப் பெற்ற வரிசைகள் எல்லாவற்றையும் சொல்லும்படியும்

கேட்க, குறத்தி சிறப்பாக எடுத்துரைக்க, பின் தனக்கும் குறி பார்க்க வேண்டுகிறாள்.

குறத்தி குறி சொல்லும் இடத்தை அலங்கரிக்கும்படி கூறுகிறாள். தன் இஷ்ட தெய்வங்களை வேண்டித் தனக்கு நல்ல குறி சொல்லும் ஆற்றலை அருளும்படி வேண்டுகிறாள். தலைவியின் கை, ரேகை இவற்றைப் பார்த்துப் பலன் கூறுகிறாள். மோகினி தன் மனக்குறி பார்க்க வேண்டுகிறாள். பின் குறத்தி, தலைவியிடம் ஒரு நட்சத்திரம், ஒரு இராசி, ஒரு பூ, ஒருமலை சொல் என்று கேட்க, தலைவி, திருவோணம், மகரம், கடப்பம், விராலி என முருகனுக்கு உகந்த வற்றையே கூறுகிறாள். இவற்றை எண்ணிப் பார்த்த குறத்தி அவள் மயக்கத்திற்குக் காரணம் வேலவர் மீது கொண்ட காதலே எனத் தெளிவாகக் கூறுகிறாள். மோகினி தன் உயிர்த் தலைவனை அடைவது எப்போது என வினவுகிறாள். குறத்தி, அருகே தோன்றும் தும்மல், கவுளி சொல், காகம் கரைதல், சங்கு முழக்கம், போன்ற நற்சகுனங்களை எடுத்துக் கூறி வேலவரின் வருகையை விவரிக்கிறாள். அப்பொழுது பாங்கி வேலவரின் கடப்ப மாலையை வாங்கிவர, தலைவி அதை அன்புடன் பெற்று அகமிக மகிழ்கிறாள். குறிதனைக் கண்டுரைத்த குறவஞ்சிப் பெண்ணுக்குப் பல பரிசுகளை அள்ளித்தந்து அனுப்பி வைக்கிறாள்.

குறத்தியின் கணவன் சிங்கன் வேட்டையாடலில் ஈடுபட்டுள்ளான். பறவைகள் படுக்கக் கண்ணி வைத்துக் காத்திருக்கிறான். கண்ணியில் சிக்கிய பறவைகளை எடுத்து வந்து கறி சமைத்துண்ண வேண்டிச் சிங்கியைத் தேடுகிறான். குறத்தியைத் தேடி வரும் குறவன் முன்பு அவள் தோன்றுகிறாள். அவள் சென்ற இடங்களையும், காணாமையின் காரணத்தையும் வினவுகிறான். குறத்தி ஊடல் விளையும் வகையில் அவனிடம் மறுத்துப் பேசுகிறாள். அவள் அணிந்துள்ள அணிகளைக் கண்டு வியந்து கேட்கிறான். அவள் தான் குறி சொல்லிக் கிடைத்த பரிசுகள் இவை என்றும், இன்னார் கொடுத்தவை என்றும் கூறுகிறாள். அவன் பரிசையும் கேட்கிறான். குறத்தி அவனுக்காக மோகினிப் பெண் தந்த பரிசுகளையும் அளிக்கிறாள். இருவரும் ஒன்று சேர்ந்து குறம்பாடி, கூத்தாடி, கள் குடித்து, மகிழ்ந்து, ரதியும் மன்மதனும் போல சேர்ந்து இந்திரன் இந்திராணி போல இன்பமாகக் கூடி வாழ்கிறார்கள்.

நாடகத்தின் இறுதியில் வாழியும் மங்களமும் சோபனமும் முறையாகப் பாடப்படுகின்றன.

சிறப்பியல்புகள்

விராலி மலை வேலவர் குறவஞ்சி என்னும் இந்நூல் இனிய சந்த அமைப்புக்களோடு எளிய சொற்களால் இயன்ற அரிய நூல். இதில் வரும் பாடல்கள் கருத்தைக் கவரும் கற்பனை வளம் மிக்கன பாடலின் நயங்கள் நேரடியாகச் சுவைக்கத் தக்கன. எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றை இவண் காண்போம்.

காப்பு:

இந்நூல் விராலி மலையில் கோயில் கொண்டுள்ள வேலவர் மீது இயற்றப் பெற்றதாகலான், சைவ சமய முறைப்படி முதற்கண் காத்தற் கடவுளாகக் கொள்ளப் பெறுபவர் விநாயகப் பெருமான். அம்முறை கொண்டு வாழ்த்துக் கூறுங்கால்,

'தந்தி தொந்திப் குஞ்சரப் பொற்றாள் காப்பாமே' 1

'ஐங்கரன் காப்புத் தானே' 2 என்று கூறுகின்றார்.

இதில், முருகனின் மூத்தோனாகிய [விநாயகனின் வலிமையையும் எடுத்துக் காட்டுவது அறிந்து இன்புறத் தக்கது.

உலாக் காட்சி:-

இறைவன் உலா வருகின்ற சிறப்பை, 'மணிபுனை மார்பன்' எனத் தொடங்கும் அகவற்பாவில் ஆசிரியர் விளக்குகிறார்.

'தேவர்கள் முனிவோர் சிறப்புடன் சூழப்
பூவையர் நடனம் புரிந்துமுன் நடக்க
அனநடை மாதர் ஆலத்தி யேந்த
தனமிகு மடவார் சங்கீதம் பாட
அந்தணர் வேதம் அகமகிழ்ந் துரைக்க
செந்தமிழ் வாணர் சீருரை கூற
மட்டுக ளில்லா வளமைக ளுடனே
இட்டப் பவனி'' 6

என்பதில், சொல்லழகு, சந்த இனிமை, பொருட்செறிவு, யாவும் நம் அகக்கண்முன் வேலவர் உலா வருவதாகவே காட்சியளிக்கின்றன.

காதல் கொண்ட மோகினி

வேலவர் திருவுலாக் காட்சியைக் கண்ட மோகினிப் பெண் காதல் மயக்கங் கொள்கின்றாள். இவளது வருத்தத்தையும் புலம் பலையும் ஆசிரியர் அழகுபட வருணிக்கின்றார்.

எண்கள்: பாடல் எண்கள்.

மோகினிப் பெண் தோற்றம்:-

இளமைப் பூத்துக் குலுங்கும் எழிற் தோற்றங் கொண்டவள் மோகினிப் பெண். அவள்,

''கதிரொளி யெனநவ மணிதக தகதகெனப்
பதசரம் நிறைமணி கொலுசொலி குமுற'' நடப்பவள்,

'சரசமு மிகுகண ரதிவடி வெனவளை
கரமதி லணிவளை கலகல கலென'' வருபவள்,

'அனநடை யிலுமிகு சுகநடை யெனவே
கனவட மிலகிய தனகிரி யசைய' வருபவள் 12

'மின்னணி விராலி வேலர்
மிதினி லாசை பூண்டு
பொன்னணி தனங்கள் விம்மிப்
போதவே விரக மீறிய
கன்னல்மென் மொழியாள்' 17
'சுந்தர மிகுந்த கொங்கை
துலங்குமோ கினியாள்' 13

என இவ்வாறு மோகினிப் பெண்ணின் தோற்றப் பொலிவினை நூல் முழுக்கக் காணலாம்.

முருகன் மீது மோகங் கொண்ட இப் பெண்ணின் விரக தாபத்தை நிலவும், தென்றலும், மன்மதனின் மலரம்புகளும், அலை கடலும் மிகுவிக்கின்றன. அவள் வருந்துகின்றாள். நிலவைக் குறித்து அவள் நிந்திப்பதாகக் கூறும் பாடலடிகள், நம் மனத்தை நெகிழ்விப்பன. அதில் ஒரு பகுதி:

'பாற்கடலில் பெண்ணுடனே தீர்க்கமுடன் பிறந்திருந்தும்
பாவையரைக் காய்வதுண்டோ நிலவே!—நாளும்
ஏற்கைதரும் வேல்முருகர் சேர்க்கையுடன் வந்தாலுன்
மார்க்கமுந்தா னெங்கே போமோ நிலவே! 14

'மாதருட பொருட்டாலுன் னாக மெல்லாந் தேய்ந்திருந்தும்
மருகவிங்கே வரலாமோ நிலவே!—நிதம்
ஆதரவாய் வேல் முருகர் மாலைதந்து சேர்ந்தாலுன்
னாண்மையெல்லாம் வீண்போமோ நிலவே! 14

என நிலவோடு பேசுதல், சுவையுடனிருத்தல் காண்க.

குறவஞ்சியின் தோற்றம்:-

நூலின் பெரும்பகுதியை ஆட்கொள்பவள் குறவஞ்சி. இவளின் அழகும் பெருமையும் அளவிடற்கரியது. குறவஞ்சியின் தோற்றத்தை - அவள் வருங் காட்சியை - நேரே கண்ணாற் காண்பது போல் வருணித்துப் பாடியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. குறத்தியின் புனைதுகிலழகும், மேகலை, கச்சை, மார்பு பதக்கம், மணிவடம், முத்தாரம், வளை, மோதிரம், காதோலை, மூக்குத்தி, கொண்டை முத்துக் குச்சு, பொன்னாரம் போன்ற அணிகளின் அழகும் அவளைச் செல்வச் சீமாட்டியாகக் காட்டுகின்றன.

''குணமிகும் நாரி குலாவும்வித் தாரி
இணைமுலை மீறி இலங்குமொய் யாரி
....
மாங்குயில் பேடு மதரதிக் கீடு
பூங்கிளி மொழியும் பொருகணை விழியும்
....
கொஞ்சிய நகைப்பும் குளிர்ந்தமெய்ச் சிகப்பும்
மிஞ்சிய மெலுக்கு மினமுலைத் துலுக்கும்
....
கண்டவர் தங்கள் கருத்துக்கள் மயங்கி
விண்டலந் தங்கு மேனகை தானோ!
நாககன் னிகையோ! நலமிகு ரதியோ!
தோகையர்க் கரசோ! துலங்குபொன் மகளோ! 27

என வியக்கும் வகையில் குறவஞ்சி வருகின்றாள்.

''காலினில் சிலம்பு கலீன்கலீ னென்ன
வாலிப மின்குற வஞ்சிவந் தனளே'' 27

என வரும் பாடலடிகள் குறத்தியின் எழில் நடையைக் காட்டுவன.

''குங்குமக் கொங்கைக் குடங்கள் குலுங்கவே
மங்கை மருங்கிடை வஞ்சியைப் போலவே'' 31

குறவஞ்சி வந்தாள் என்னும் பகுதிகள் அவள் பெயர்க்காரணத்தையும் நயம்பட உரைக்கக் காணலாம்.

குறத்தியின் சொல்வளம்:-

விராலி மலை வாசலின் வளத்தையும் வன்மையையும் விளக்கும் குறத்தின் சொல் வளம் குறிப்பிடத்தக்கது. பல மலைகளையும் தேசங்களையும், தலங்களையும் அறிந்து வந்த குறவஞ்சி

வன் தாயகமாகிய விராலி மலையின் வளப்பங்களையும் சிறப்பையும் கூறும் பகுதிகள் சிறப்புடையன.

சாதிப் பெருமை

நாட்டுக் குறத்தி, கொச்சைக் குறத்தி, தெய்வக் குறத்தி' மலையாளக் குறத்தி என்னும் நால் வகையில் இவள் தெய்வக் குறத்தி எனப்படுகிறாள்.

"செண்டுமுலை மாதரசே நாங்கள்
செல்வஞ் சிறந்ததெய்வச் சாதி" 36

எனத் தன் சாதிப் பெருமையையும் குல வொழுக்கங்ளையும் எடுத்துக் காட்டும் பகுதிகள் அறியத்தக்கன.

மலை வளம்:—

குறத்தி தன் மலைவளம் கூறும் பகுதிகள் விராலியின் சிறப்பினை விளக்குவன. மலை நாட்டிற்கே உரிய வளங்கள் ஒருபுற மிருக்க, சில வியத்தகு காட்சிகள் நம் கருத்தைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. அவற்றுள் சில,

"பசுவுங் கொடுபுலி யுஞ்சேர்ந்து
பரிவாய்ச் சுனைநீரைப்
பருகிக் கரையேறி வந்து
படுக்குமொரு தலத்தில்.'
'இசைவாய் நாகங் கீரியுடன்
இணங்கி விளையாடும்'
'எலிபூனை களுட னேசேர்ந்
திருந்தே மனம்பொருந்தும்' 41

என இவ்வாறு பல காட்சிகளைக் காணலாம்.

மூலிகை வளம்

விராலி மலை நாட்டில் கிடைக்கும் மூலிகைகளைப் பற்றிய விளக்கங்கள் அறியத் தக்கன. சாவா மருந்து தரும் எருமை விருஷம், பொன்மேனி தரும் சோதிப்புல், நரை மாற வைக்கும் நலஞ்சேர் கருநெல்லிக்கனி, "இலை," "காய், மரமெல்லாம் இனிக்கும் இனிய வேம்பு, பதினாலுல கெல்லாம் சுற்றிப் பார்க்க வைக்கும் பச்சிலை, இரும்பைத் தங்கமாக்கும் பச்சிலை இச்சையை உண்டாக்கும் இன்ப மூலிகை, எண்ணம் போல் ரூபமெடுத்து இயல்பாய்ச் சென்றுவர உதவும் எழில் மூலிகை, மற்றும் சஞ்சீவி முதலான மூலிகைகள் இம்மலையில் உள்ளதாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

குறத்தி குறிசொல்லும் முறை, அவளின் நயம் மிக்க பேச்சு, தலைவியைத் தேற்றும் பாங்கு போன்றவை தனித்தன்மையின. கதையில் முக்கிய உறுப்பினளாக விளங்கும் குறவஞ்சியின் காதலும், ஊடலும், கூடலும் அவள்தன் குணநலனை எடுத்துக் காட்டுகின்றன.

தலைவிக்குக் குறி கூறுபவளாக முற்பகுதியிலும், தன் கணவனோடு கூடிக்களிப்பவளாகப் பிற்பகுதியிலும் வருகின்றாள். முற்பகுதியில் அவளது புற வாழ்வும், பிற்பகுதியில் அக வாழ்வும் விளக்கப் படுகின்றன.

இவ்வாறே, தோழி, சிங்கன் போன்ற நாடக மாந்தர்களின் இயல்புகளையும் இடையிடையே அறிந்து மகிழலாம்.

கருத்துச் செறிவுகள்:–

'சித்தசன் போலச் செழித்துமே லோங்கி
அண்டமுந் தாண்டி அப்பால் வளர்ந்து
விண்டலத் துள்ளோர் விரும்பியே பணியத்
தராதலந் துதிக்கத் தர்மமே செழிக்கும்'' 6

'மலர்மேல் வண்டு மோதுமது
வழிந்தே மிகவோடும்
வருபானு வின்புரவி யின்கால்
வழுக்கி ரதஞ்சருக்கும்' 41

போன்ற பாடலடிகள் நுண்ணிய கருத்தமைதி கொண்டவை.

உவமை நயங்கள்:-

'ஏங்கியே கனலி லேற்றிய மெழுகாய்
உள்ளமு மெத்த உருகியே வாடி' 6

'திருமக ளென்ன வந்த
தேன்மொழிக் குறப்பெண்' 40

'சிங்கத்தின் குட்டி போன்ற சிங்கன்' 67

'ரதியும் மதன் போலும் சேருவோம்' 80

'இந்திர னிந்திராணி போலின்பம்' 80

'வாகினியே நிகராகு மோகினி' 38

'குங்குமக் கொங்கைக் குடங்கள் குலுங்கவே
மங்கை மருங்கிடை வஞ்சியைப் போல' 3

'கந்த மிகுந்த கதம்ப மணிந்திடு
அந்த மிகுந்தமை மந்தியைப் போலே'

எனவும், பிறவாறும் வருவன உவமை நயங்களுக்கு எடுத்துக் காட்டுகளாம்.

ஓசை நயங்கள்:-

'சின்ன விடையாள் மின்னு துடையாள்
அன்ன நடையாள் பின்னு சடையாள்' 78

'சிந்துரந் தீட்டிச் செவ்விழி மீட்டிச்
சொந்தம் பாராட்டித் துலங்குகண் ணாட்டி' 78

'கச்சுமுலை யிரண்டும் பச்சிள நீரென
மெச்சி மிகமகிழ்ந் திச்சையாய்த் தானெவர்
கட்டழகி தன்னைக் கிட்ட வழைத்துத் தான்
சட்டவாய்க் கூடியே கட்டிச் சுகித்தாரோ' 77

''செண்டுமுலை யிரண்டு மின்ன
— தண்டை கலீன் கலீனென்ன
'வண்டுநிகர் குறவஞ்சிமுன் — மோகினி வந்தாள்' 59

'செண்பக மலர்மேனி சேர்க்கை மிகும் நிதானி
நண்புறுங் கலைக்கியானி நாரியர்க் கபிமானி' 10

எனவும் பிறவாறும் வருவன ஓசை நயங்கட்கு எடுத்துக்காட்டுகளாம்.

சேரிமொழிச் சிறப்புக்கள்

'ஏ அம்மம்மே, பெரியம்மே,
சொல்ல வேணு மென்றண்டல்லோ கேட்கிறாய்' 35
ஒசத்திக் கத்தூரி யாலே மெழுகடி' 56

'கண்டன டய்யே - பறவைகள்
கண்டன டய்யே' 70

'வருகு தய்யே-பறவைகள்
வருகு தய்யே 71

'மெய்யினு மய்யே-யினங்குடி
மெய்யினு மய்யே' 73

'கெம்பார டய்யே-பொருபொரு
கெம்பார டய்யே' 74

'கும்பு கும்பாகவே உள்ளானுந் தாராவுங்
கொக்குமென் கண்ணிக்குள் சிக்கிக்க வருகுது'' 74

'சிக்கிச்ச டய்யே-பறவைகள்
சிக்கிச்ச டய்யே' 75

'சம்பான் கோழியுங் கூழைக் கிடாக்கொக்குஞ்
சாரி சாரி யாகத் தானும் வருகுது' 74

'இந்நேரந் தானும்நீ யெங்கே யிருந்தாயென் சிங்கி-நான்
எங்கே யிருந்தாலும் நீசெய்வ தென்னடா சிங்கா' 80

'பாராட்ட லாமென்று பாசாங்கு பேசாதே சிங்கி-அந்தப்
பாசாங்கு செய்வதுன் சாதித் தொழிலடா சிங்கா' 80

'உன்னைச் சபாஷியென்று உகந்துநான் மெச்சுவேன் சிங்கி' 80

'திருமகள் சேரும் விராலி முருகையர் நாட்டில்-நல்ல
வரிசையாய்க் குறம்பாடி மகிழ்ந்துகூத் தாடுவோம் சிங்கா' 80

என்பன போன்றன, சேரிமொழிச் சிறப்புக்களைச் செவ்விதிற் கூறும் தொடர்களாம். இவை வழுச்சொற்களாகக் கல்வியறிவு பெறாத, காட்டில் வாழும் குறவர் பேசும் பேச்சுக்கள் எளிமையாகவும், கேட்க இன்பமாக இருக்கும்படியும் அமைந்துள்ளன.

கந்தன் பற்றிய கருத்துரைகள்:

வேத மார் கலையான் 6
வேத மேவிய சத்தி பாலன் 8
வேலர் 16, 61
வேலவர் 4, 24.

இன்னன போன்றன, இறைவனைக் குறித்துச் சிறப்பாகக் கூறும் திருப்பெயர்கள்.

விராலிமலை பற்றிய விளக்கங்கள்:-

அட்டதிக்கும் புகழ் விராலி 19
அண்டர் தொழும் விராலிகிரி 23
அண்டர் தொழும் வேலவர் நன்னாடு 36
அந்தணர் சூழ் விராலி 13
அருமறை முனிவர் போற்றும் அறுமுக வேலர் நாடு 40
அறுமுக வடிவேலர் அன்புசேர் நாடு 32
கந்தர்தன் நாடு 26
கந்தர் விராலி நாடு 10
கந்தருக்குகந்த விராலி 68
சீர்பூத்த கலை மகளும் திருமகளும்
நிலமகளும் செழித்து வாழும்
கார்பூத்த மேருநகர் விராலிகிரி 1
சுந்தரஞ்சேர் விராலிகிரி 60
சுந்தரமிகும் விராலித்துரை வடிவேலர் நாடு 34
ஞாலம் புகழ் விராலிகிரி 82
தராதலம் துதிக்கும் விராலியங்கிரி 32
தருவுயரும் விராலிகிரி 4
தவமுனிவோர் சூழ் விராலி 4
திருக்கடம்பர் நாடு 38
துங்கமயில் மீதில் வரும் சுப்பிரமணியர் நாடு 41
துரைவேலர் தன்னாடு 32
துரைவேலர் திருநாடு 30
துரைவேலர் தேசம் 43
தென்விராலி நாடு 46
தேசம் புகழ் விராலிகிரி 4
நன்றிதரும் விராலிகிரி நாடு 69
பத்தர் தொழும் விராலிகிரி 4
பொன் மருவும் வேல்முருகர் விராலிகிரி 45

எண்கள் -பாடல் எண்கள்.

பொன்னணி விராலி 23
மணமிகும் விராலி மலை 6
முத்தமிழ்சேர் விராலிகிரி 52
மந்திரம் நிகர் விராலி 26
மருவுயர் விராலி வெற்பு 40
மருவுயரும் விராலி கிரி 82
மின்னணி விராலி வெற்பு 27
மேரு நகர் 1
வடிவேலர் நாடு 47
வசனமிகு விராலிகிரி 47
வாசமிகு விராலி நன்னாடு 46
வாசமிகும் விராலிகிரி 15
விராலிகிரி 1
வேதமா முனிவோர் சூழும் விராலியங்கிரி 2
வேத மேவிய விராலி 24
வேலர் நாடு 67
வையகம் புகழ் விராலி 6
வையகம் புகழ் விராலி கிரி 25.

இன்னன போன்றன, விராலிமலை பற்றிய விளக்கங்களாம்.

நாடக இலக்கியம்:–

வார்பூத்த கும்பமுலைக் குறவஞ்சி நாடகம் 1, குறவஞ்சி 2, 4, குறவஞ்சிப் பிரபந்தம் 3, நற்றமிழ் சேர் குறவஞ்சி நாடகம் 4, நவமணிசேர் குறவஞ்சி நாடகம் 4, இன்பக் குறவஞ்சி 6, என வழங்கும் தொடர்கள் இந்நூல் ஒரு நாடக இலக்கியம் என் பதைத் தெளிவு படுத்துகின்றன.

இந்நூலில் நாடகத்திற்குரிய இசைப்பாடல்களும், தருவாக விளங்கும் பல சிந்துப் பாடல்களுக்கு இராகம் ஆகிய இசைக் குறிப்புக்களும் விளக்கப்பட்டுள்ளன. இடையிடையே வசனங்களும் உள. இந்நூல் எளிய நடையும் சொல்லழகும் மிக்கது.

குன்றுதோறாடும் குமரனின் அருள் வேண்டும் அடிப்படையில் அமைந்த இந்நூல் அன்பர்கள் படித்து இன்புறத்தக்கது.

வே. இரா. மாதவன்

ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

தசாங்கம்:-

விராலிமாமலையான் - மலை, பொன்னிமா நதியான் - நதி, விராலி நன்னாடன் - நாடு, விராலி நன்னகரான் -ஊர், விசயவாம் பரியான் - குதிரை, முழங்கு குஞ்சரத்தான் - யானை, சேவலங் கொடியோன் - கொடி., முழங்கும் முரசான் - முரசு, தோகைமா மயிலான் - ஊர்தி, வெற்றி வேலுடையான் - படை, (6)

தெய்வங்கள்:-

அகிலாண்ட தேவி 58, அங்கயற்கண்ணி 58, அத்திமாமுகவன் 58, அய்யனார் 56, அனுமன் 51, ஆயிமாகாளி 58, இந்திரன் 53, இந்திராணி 53, இரண வீரபத்திரன் 56, இராமன் 53, இறையவன் 81, ஈசர் 4, உமை 59, ஊரய்யனார் 58, எக்காலதேவி 58, ஐங்கரன் 2, 3, 58, ஓங்கார தேவி 58, கசமுக விநாயகன் 28, கதிரோன் 41, கமல மார்பன் 28, கருப்பன் 56, 58, கலைமகள் 1, 33, 81, கன்னி எழுவர் 56, காந்திமதி, 58, காமாட்சி 58, சாஸ்த்தா 56, கைலாசர் 4, சத்த கன்னியர் 6, சரஸ்வதி 59, சித்தி விநாயகன்58,சிவகாமி58, சிவன் 6, சீதை 53, செல்வக் கணபதி 58, செல்லாண்டியம்மா 58, திருப்பாண்டியீஸ்வரர் 53, திருமகள் 1, 33, 81, தெய்வானை 81, தேவ குஞ்சரி 53, தையல் நாயகி 58, நாச்சியம்மாள் 56, நிலமகள் 1, பச்சைமால் 59, பார்வதி 81, பிடாரி 58, புண்டரீக மாலயன் 81, புயவழகர் 4, பெரிய நாயகி 58, மங்கையோர் பாகர் 3, மட்டுவார் குழலி 58, மதுரை மீனாட்சி 53, மகா பூதனாட்சி 58, மாதவன் 28, மாதுமையாள் 1, மாயன் 3, மாரிமுத்தாய் 58, முருங்கமா முனி 58, முள்ளடிக் கருப்பர் 58, லட்சுமி 58. 59, வள்ளி 53, 81, விசாலாட்சி 58, விமலன் 3, விராலூர்ப் பதியீஸ்வரர் 58, வீரபத்திரன் 58, வீரவாகுதேவர் 4, 5, வேங்கிட மாயவன் 28, வைரவன் 58, ஸத்ய பாமை 59,

தெய்வத்தலங்கள்:-

அண்ணாமலை, ஆவினங்குடி, உத்திர கோச மங்கை, கடம்பர் கோயில், கண்டியூர், கண்ணபுரம், கதிர் காமம், கருவூர், கழுக் குன்றம், காசி, காஞ்சிபுரம், குடந்தை, கூடல், கைலாசம், சிதம் ரம், சிராப்பள்ளி, சிவகிரி, சீரங்கம், சீர்காழி,

செங்காட்டங்குடி, சோலை மலை, திருக்குற்றாலம், திருக்கோட்டியூர், திருச்செந்தூர், திருவாடானை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவானைக்காவல், திருவிடை மருதூர், திருவெண்காடு, திருவேடகம், திருவையாறு. தென்காசி, நாவலூர், பூவணம், பெருந்துறை, பேரம்பலம், பேரூர், மத்தியார்ச்சுனம், மறைக்காடு மன்னார் கோயில், மாயூரம், ராமேசுவரம், வஞ்சி, வயலூர், வேங்கிடம், வேளூர், வைகுந்தம் (45).

தேசங்கள்:-

இந்துஸ்தானம், ஒட்டியம், கங்கம், கச்சி, கண்டி, கபாடம், கர்நாடம், கல்யாணம், கலிங்கம், கவுசிலை, காசி, காருடம். கீர்வாணம், குடகம், குதம், கேகயம், கேரளம், கொங்கம், கொச்சி, கொல்லம், கொல்லர்புதர், சாளுவம், சிங்களம். சிந்து, சீனம், சோனகம், டில்லி, திராவிடம், திரிகூடம், துலுக்காணம், துளுவம், தெலுங்கு தேசம், மலையாளம், மகேதம். மாராடம், மீளுவம், வங்காளம், விராடம், விலாடம், விலாசம். (43)

மலைகள்:–

அருணகிரி, அஸ்தகிரி, அஷ்டகுல பர்வதம், ஆனமலை, இரத்தினகிரி, இமையகிரி, உதயகிரி, கந்தமலை, கருமலை, கழுக்குன்றம், கொல்லிமாமலை, சதுரகிரி, சாமிமலை, சிராமலை, சோலை மலை, தங்கமகமேரு, தமிழ்முனி மலை, திருவோங்கி மலை, தோகைமலை, நாரத மாமுனிமலை, நீலமலை, பச்சைமாமலை, பரங்குன்றம், பவளமலை, பழனிமலை, பிரான்மலை, பொதியமாமலை, மந்திரகிரி, வட வேங்கடம், வராகமலை, விந்தைகிரி, விருத்தாசலம், வீரமலை, வெள்ளிமலை, வேள்மலை (39)

நதிகள்:–

அமராவதி, கங்கை, கவுரி, கன்னியாகுமரி, காவேரி, கிருஷ்ணைவேணி, கோதாவரி, சண்முகநதி, சரசுவதி, சிந்து, சொர்ணபத்திரை, தாம்பிரவேணி, துங்கபத்திரை, நர்மதா, பெண்ணை, பொன்னி, மணிமுத்தா, யமுனை, வேகவதி, வேதநதி, வைகை (49)

உயிரினங்கள்:–

அஞ்சுகம் 6, அரவம் 6, அளி, 6 அன்றில் 72, அன்னம் 6, 27, ஆனை 37, உள்ளான் 74, எலி 41, கடகம் 41, கம்புகம் 71, கயல்

6, 41, கரி 6, கருநிற நாரை 71. கவி 41, கவுதாரி 75, கவுளி 62, காகம் 62, கிடா 56, கிளி 6, கிரி 41. குதிரை 56, குயில் 6, 17, குருகு 64, கூழைக்கிடாக் கொக்கு 72, கொக்கு 70, 74, சிப்பிமுத்து 41, சுரும்பு 6, செந்நாரை 71, சேவல் 56, தாரா 72. நாகம் 6, நாரை 75, பவளக்கால் நாரை 70, பச்சைமயில் 33, புரவி 41, புலி 41, புறா 75, பூவை 6, பூனை 37, மகரம் 6, 20, மந்தி 41, மயில்6, 37, மரவம் 6, மான் 6, 3, 6,, 37 மேடம் 41, வண்டு 6, 41, வரி 6, வரிக்குயில் 6, வெண்ணாரை 71, வேங்கை 6,

மரங்கள்:—

எருமை விருஷம் 41, கதலி 6, கமுகு 6, 41, 56, தெங்கு 6, புன்னை 6, மா 6, வாழை 56, வேம்பு 41.

பூக்கள் :—

கஞ்சம் 59, கடப்பம் 60, சண்பகம் 6, தாமரை 6, துத்தி 80, துளபம் 6, பிச்சி 6, மரு 6, மல்லிகை 6, முண்டகம் 6, முல்லை 6, முளரி 6,

உணவுப் பொருள்கள்:—

அவல் 56, இஞ்சி 6, இட்டிலி 56, எள்ளுண்டை 56, கடலை 56, கரும்பு 6, கருநெல்லிக்கனி 41, சர்க்கரை 56, செந்நெல் 6, சோதிப்புல் 41, தினைமாவு 37, தேங்காய் 56, தேன் 6, 37, தோசை 56, பயறு 56, பலா 6, பாக்கிலை 56, மஞ்சள் 6, மாங்கனி 6, மோதகம் 56,

நறுமணப் பொருள்கள்:—

கந்தம் 6, சந்தனம் 56, சவ்வாது 6, 64, 80, புழுகு 6.

ஆடை ஆபரணங்கள்: —

அக்குவடம் 53, அம்புலித்தாயத்து 53, அஷ்டக்கடையம் 53, ஆணிப்பொன் 9, கங்கணம் 29, கச்சை 27, 64, கச்சைச் சரப்பணி 80, கடுக்கன் 6, கடையம் 27, 53, கலிங்கம் 6, காக்காய்ப்பொன்பட்டம் 80, காதோலை 27, காற்சதங்கை 80, கொங்கணிக் கச்சை 56. 63, கொங்கணிப் போர்வை 80, கொத்துச்சரப்பணி 53, கொத்துச் சல்லி 80, கொலுசு 27, கைக்கட்டுப் பவளம் 80, சதங்கை 27, சரப்பணி 80, சரிகை ரவிக்கை 80, சிலம்பு 27, சுட்டி 27, சுண்டைக் கனிக் கோர்வை 80, சூரிய காந்திப்பூ 80, தண்டைகள் 29, தும்பிப் பதக்கம் 53, நவரத்தினப் பதக்கம் 53, பச்சைக் கபாய் 6, பட்டுக்

கச்சை 53, பசும் பொன்னாபரணம் 6, பதக்கம் 6, 27, பவழம் 27, பாதசரம் 27, பீதாம்பரம் 63, பொற்கம்பிச்சேலை 53, பொற் கூடை 63, பொற் சதங்கை 53. பொன்னாரம் 27, 53, மணிச்சரம் 27 மணிவடம் 27, மகுடம் 6, மாணிக்கச் சுட்டி 53, மாணிக்கம் 6, முத்தாரம் 27, முத்து 6, முத்துத் தாடவம் 80, முத்துத்துராய் 6, 53, 80, முத்துத் தொங்கல் 80, முத்துமாலை 53, முத்து வர்ணக் கலை 56, முத்தூணி 53, முலைக் கச்சு 53, முள்ளிப் பழக்கோவை80 மூக்குத் தளுக்கு 80, மூக்குத்தி 27, மெட்டி 27, 53, மேகலை 27, மோகன மாலை 27, 80, மோதிரம் 27, ரத்தினச் சுட்டி 80, ரத்தினத்தோடு 80, வச்சிர மணிகள் 53. வச்சிரகண்டசரி 80, வக்சிர ஓலை 53, வயிடூரியம் 6, வர்ணச்சேலை 56, வர்ணப் புடவை 63, வெண்டையம் 80, வெண் முத்துக்குச்சுருமால் 53, வெள்ளிச் சிலம்பு 80,

வாத்தியங்கள்:-

சங்கு 6, தவில் 6, தாளம் 6, துடி 6, பூரிகை 6, பேரிகை 6, மத் தளம் 6, முரசு 6, மேளம் 6, வீணை 59.

ரேகைகள்:-

அன்னரேகை, சக்கிரரேகை, சங்க ரேகை, தமருக ரேகை, தனரேகை, பத்மரேகை, புத்திர ரேகை, பூரணரேகை, மச்ச ரேகை, வித்தை ரேகை. 59.

பிற மொழிச் சொற்கள்:-

அக்கினி 51, அகோரம் 56, அபிமானி 27, ஆக்கினை 6, ஆட் சேபம் 80, இந்திர ஜாலம் 51, உச்சிதம் 26,56, ஒய்யாரி 27, கீதம் 37, கோகரணம் 51. குளிசம் 51, சகசம் 24, சகலர் 6, சகி 6, சங்கதி 38, சங்கீதம் 6, சந்ததம் 6, சந்தோஷம் 34, சபாஷ் 80, சனங்கள் 59, சிதனம் 37, சிமாட்டி 78, சௌபாக்கியம் 33, சொர்ண கும்பம் 56, சையோகம் 10, தீபதூபம் 56, தூஷணித்தல் 19, நாரி 27, நிதானி 27, பவம் 4,6, பவனி 6. பிரபலம் 6, பிராண சகி 24, பிராண நாதன் 81, புத்திர சம்பத்து 59, புராதனம் 6, புஷ்பம் 56, பூஷணம் 9,59, மங்களாகாரம் 6, மார்க்கம் 14, மூர்க்கம் 56, யாசகர் 59, ரிஷீஸ்வரர் 41, ருத்திராட்சம் 6, ரூபம் 14, வஸ்த்து 57, வாஞ்சை 59, வார்த்தை 6, விற்பன்னம் 27.

பழமொழி:-

'மடியில் கனங் கொண்டால் வழியில் பயமுண்டு'—80

விராலிமலை வேலவர் குறவஞ்சி

(காப்பு)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. சீர்பூத்த கலைமகளும் திருமகளும்
நிலமகளும் செழித்து வாழும்
கார்பூத்த மேருநகர் விராலிகிரி
மேவுதிரு கந்தர் மீதில்
வார்பூத்த கும்பமுலைக் குறவஞ்சி
நாடகத்தை மகிழ்ந்து கூறத்
தார்பூத்த மாதுமையாள் தந்திதொந்திக்
குஞ்சரப் பொற்றாள் காப்பாமே

2. வேதமா முனிவோர் சூழும்
விராலியங் கிரியில் மேவுந்
தாதவிழ் கடப்ப மாலை
தரித்தசண் முகவர் மீதில்
சோதனைக் குறிகள் சொல்லுந்
துறைக்குற வஞ்சி கூற
ஆதர வாக வந்த
ஐங்கரன் காப்புத் தானே.

3. கங்கையு மழுவு மானுங்
கலைமதி யரவுஞ் சூடு
மங்கையோர் பாக ரீன்ற
வளர்முரு கேசர் மீதில்
கொங்கைசிங் கார மான
குறவஞ்சிப் பிரபந்தங் கூற
ஐங்கரன் விமலன் மாயன்
அடியிணை காப்புத் தானே.

---

1. சீர் - சிறப்பு, கார் - அழகு. மேரு - மலை. கிரி - மலை வார் - கச்சு. தார் - மாலை. குஞ்சரம் - யானை. தந்தி - ஆண் யானை. தொந்தி - பெரு வயிறு. தந்தி தொந்திக் குஞ்சரம் விநாயகன்.

2. தாது - பூந்தாது; தேன். சண்முகவர் - ஆறுமுகன்; முருகன். சோதனை - ஆராய்வு. ஐங்கரன் - விநாயகன்.

3. மங்கையோர் பாகர் - சிவன். முருகேசர் - முருகன். சிங்காரம் - அலங்காரம். விமலன் - சிவன். மாயன் - மாயவன்; திருமால்.

(தோடயம்)

4. தருவுயரும் விராலிகிரி தனில்வளரும் வேலவர்மேல்
மருவுயருங் கொங்கை குறவஞ்சி தனைக்கூறத்
தரைபுகழுங் கைலாச ரருள்பெருகும் வடிவுடையக்
கரியமத முடையதொந்திக் கணபதிதாள் துணையே
செய செய. 1

தேசம்புகழ் விராலிகிரி செழிக்கும்வடி வேலவர்மேல்
வாசமிகுங் கொங்கை குறவஞ்சி தனைக்கூற
நேசமிகு தேவியுமை ஆசையுட னேமருவும்
ஈசருடத் திருவடிக ளெந்நாளுந் துணையே
செய செய. 2

பத்தர்தொழும் விராலிகிரி யுற்றவடி வேலவர்மேல்
நற்றமிழ்சேர் குறவஞ்சி நாடகத் தைக்கூறச்
சத்தியக ளத்திசிவ சத்திமௌ னத்திபரா
சத்தி திருவடிகள் நித்தமுந் தான்துணையே
செய செய. 3

தவமுனிவோர் சூழ்விராலி தனில்வளரும் வேலவர்மேல்
நவமணிசேர் குறவஞ்சி நாடகத் தைக்கூறப்
புவனமகிழ் திருஉறையும் புயவழகர் மலரடியும்
பவமகற்றும் வீரவாகு பதநிதமுந் துணையே
செய செய. 4

மங்களம்

5. மயில்வடி வேலனுக்கு மங்களம்
விராலிமலையி லனுகூலனுக்கு மங்களம்

சுந்தரஞ்சேர் மார்பனுக்கும்
துலங்கிய பிரதாபனுக்கு
மந்திர சொரூபனுக்கு மங்களம் 1

பங்கயப்பொற் றாளனுக்கு
பன்னிருகை யாளனுக்கு
மங்கைவள்ளி மணாளனுக்கு மங்களம் 2

---

4. 1. தரு - மரம். வேலவர் - வேலாயுதன் - முருகன். மரு - மணம். செயம் - வெற்றி. 2. நேசம் - அன்பு.

5. சுந்தரம் - அழகு. பிரதாபம் - கீர்த்தி, வீரம். பங்கயம் - தாமரை. துங்கம் - பெருமை.

வளமிகுசம் பந்தனுக்கு
மகேசுவரர்தன் மைந்தனுக்கு
வளர்புகழ்சேர் கந்தனுக்கு மங்களம் 3

மயில்வடி வேலனுக்கு மங்களம்-மங்களம்
விராலிமலை முருகேசனுக்கு மங்களம்.

துங்கமயில் வாகனுக்குஞ் சூரைவென்ற நேசனுக்கும்
மங்கைவள்ளி பாகனுக்கும் வானத்தந்தி மோகனுக்கும்
பொங்குபுகழ் வீரனுக்கும் புனைகடப்பந் தாரனுக்குஞ்
செங்கைவடி வேலனுக்குந் திருமுரு கேசனுக்கு மங்களம்
நாளுஞ் சிவனருள் குமாரனுக்கு மங்களம். 4

மங்களம் முற்றும்

(வேலவர் பெருமையும் அவர் பவனி வருதலும்)
அகவல்

6. மணிபுனை மார்பன் மகிழும் பிரதாபன்
துணைமல ரடியான் துலங்குபொன் முடியான்
பூவுல குள்ளோர் போற்றிசெய் திறைஞ்சத்
தேவர்கள் துதிக்குமத் தேவாதி தேவன்
சீர்பெறு வளமை செழிக்கு மைந்தருவும்
பேர்பெற விளங்கப் பெருபுக ழோங்கக்
களைபெறு வேங்கையுந் தளைபெறு வேங்கையும்
ஓங்கிய கானுந் தூங்கிய தேனு
மேவிய நாகமுந் தாவிய நாகமுந்
துலங்குமான் மரையும் இலங்குதா மரையும்
நலமிகு வரியும் பலமிகு கரியுஞ்
சிறிய அரவமு மீறிய மரவமுஞ்
சந்தனக் காவும் ஐந்தருக் காவு
மருமல ரோடையும் பரிமள வாடையு
மலருறை யளிகளும் நலமுறு கிளிகளுஞ்

---

6. கான் - காடு. நாகம் - பாம்பு, குரங்கு. மரை - மான் வரி - புலி. கரி - யானை. அரவம் - பாம்பு. மரவம் - வெண்கடம்பு; குங்கும மரம். கா - சோலை. பரிமளம் - மிகுமணம். வாடை - காற்று. அளி - வண்டு.

கூவிய குயிலுந் தாவிய மயிலும்
மஞ்சுகள் தவழும் வரிசையே யிலங்க
மிஞ்சிய வேத மெத்தவுந் துலங்க
அருந்தவ முனிவோர் அன்புடன் வளரப்
பொருந்த அனேகப் புதுமைகள் சேர
ஒளிவுறு முடிதரித் துற்றதி னாலும்
அழகுறு மதிக்குடை அமைத்ததி னாலும்
பூவையஞ் சுகமும் பொருந்திய தாலுங்
காவினில் மலர்கள் கதித்ததி னாலும்
சுரும்புட னிருளும் துலங்கிய கயலும்
கரும்புகள் வளர்ந்து கதித்ததி னாலும்
தேவகன் னியர்கள் சிறப்புடன் சூழ
யாவரு மயங்கி யன்புடன் பணிய
இத்தனை விதமு மியல்புற் றதினால்
சித்தசன் போலச் செழித்துமே லோங்கி
அண்டமுந் தாண்டி அப்பால் வளர்ந்து
விண்டலத் துள்ளோர் விரும்பியே பணியத்
தராதலந் துதிக்கத் தர்மமே செழிக்கும்
விராலிமா மலையான் வேதமார் கலையான்
சிவனுட முடிமேல் சிறந்திடுங் கங்கை
புவனமீ துற்றப் புலன்கிரி பிளந்து
மாதரைப் புகுந்து மண்டியே நடந்து
போதவே மிகுந்து பொங்கியே வழிந்து
வாவிகள் நிறைந்து மருமலர் சொரிந்தக்
காவுகள் தோறுங் கலந்துநீர் பரந்து
மல்லிகை பிச்சி மருவுடன் துளப
முல்லைசெண் பகமு முண்டக மலருஞ்
சேரவும் வாரித் திரண்டொரு முகமாய்
வாரநீர் விசையில் மலரிரு பாலுஞ்
சேர்ந்துமா லிகைபோல் சிறப்புட னழகாய்ப்
பொருந்திட வின்பம் பொருந்திய மகரந்
தத்தியே பாயத் தனிலெதிர் சங்கின்

மஞ்சு - மேகம். கதித்தல் - சிறத்தல். சுரும்பு - மலை வண்டு. சித்தசன் - காமன். அண்டம் - உலகம் - விண்டலம் - ஆகாயம். தராதலம் - கீழேழ் உலகின் ஒன்று, புவனம் - பூமி. வாவி - குளம், ஆற்றோடை. மரு - மருக்கொழுந்து துளபம் - துளசி. முண்டக மலர் - தாமரை மலர். மாலிகை-மாலை.

முத்துக்க ளுடனே முளரிமுத் துதிர
நாக மணியும் நவமணி விளைவும்
யோகமா முனிவோ ருகந்து நீராட
சத்த ரிஷிகளும் சத்தகன் னியரும்
நித்தமும் வந்து நீர்விளை யாட
தேவாதி தேவர் தினமுநீ ராட
பூவுல குள்ளோர் புகழ்ந்துநீ ராட
தவமிகப் பெருகிச் சந்ததம் தத்தம்
பவங்களைத் தீர்த்துப் பதங்களைக் கொடுக்கும்
மின்னார் திரைகள் மேவியே நிறையும்
பொன்னிமா நதியான் புகழ்பெரும் பதியான்
மந்திகள் கோடி வந்துமே கூடிச்
சுந்தரம் நீடிய சோலையுள் நாடித்
தழைத்திடு புன்னை தன்னிலே தாவி
வளர்கமு கேறி மாவினில் மேவிச்
சிந்தையின் களிப்பாய்த் தெங்கினி லுகந்து
அந்தர லாகுகள் அன்புடன் போட
தெங்கிள நீர்கள் சிதறியே வீழ்ந்து
மாங்கனி யுதிர்ந்து வளமிகு பலாவின்
கனிதனை யுடைத்துக் கதலியைத் தகர்த்து
இனிதுறு கனியி னிரசங்கள் வழிந்து
வாவியில் நிறைந்து மடைவழிப் புகுந்து
மேவிய பழன மீதெலாம் பரந்து
இஞ்சியும் செந்நெலு மிதம்பெற வளர
மஞ்சளும் கன்னலும் வளர்ந்துமே லோங்க
காவினில் வண்டு பூவித ழுண்டு
பொருந்துமஞ் சுகமும் பூவையும் பாடத்
திருந்திய மயில்கள் சிறைவிரித் தாட
வரிக்குயில் கூவி வளரவு மன்னம்

மகரம் - சுறாமீன். முளரி - தாமரை. நாகமணி - நாக ரத்தினம். நவமணி - கோமேதகம், நீலம், பவளம், புருடராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம். சத்த ரிஷிகள்- இவர்கள் குபேரனுக்கு ஆசிரியர்கள், அத்திரி, வசிட்டன், விசுவா மித்திரன், காசியபர், கௌதமர், பரத்துவாஜர், ஜமதக்னி முனிவர். சத்த கன்னியர் - அபிராமி, இந்திராணி, கவுமாரி, காளி, நாராயணி, மகேசுவரி, வராகி என்னும் ஏழு மாதர்கள். சந்ததம் - எப்பொழுதும். பவம் - பாவம். பதம் - இன்பம். மின்- - ஒளி. திரை - அலை. மந்தி - குரங்கு கதலி - வாழை. பழனம் வயல் கன்னல் - கரும்பு. அஞ்சுகம் - கிளி. பூவை - குயில். சிறை - இறகு

பெருக்க வனேகம் பிரபல முடனே
புராதன மாகப் பொருந்தியே செழித்த
விராலிநன் னாடன் மிகுந்தவிஸ்த் தாரன்
திருவுறை மாடமுஞ் சித்திரக் கூடமு
மருமலர் வாடையும் வளர்மணி மேடையு
மின்னு சாளரமும் விளங்குமா மதிலும்
பொன்னணி சிகரிப் பொருந்து மாலையமுஞ்
செந்தமிழ்ப் பெருக்கமும் ஐந்தரு நெருக்கமுஞ்
சதுர்மறை'வாணரு முதிர்தமிழ் வாணரும்
அனந்தரு மடமுக மனந்தனில் திடமும்
பெருந்தவ மீனும் அருந்தவத் தோரும்
துலங்குவா ரணமும் இலங்குதோ ரணமும்
ஆடையா பரணம் அழகுட னிலங்க
மேடைமேல் மஞ்ச மீதினில் மடவார்
ஆடவர் தன்னை அன்புடன் சேர்ந்து
கூடியே நித்தங் குணமுடன் வளர
மங்களா காரம் வளம்பெறச் சிறக்கத்
திங்கள் மும்மாரி தினமுமே பொழிய
இதம்பெறச் சகலரு மின்பமாய் மகிழ்ந்து
விதம்பெறு செல்வம் விராலிநன் னகரான்
பெருமையே சிறக்கப் பிரபல முடனே
மறுவுறு கடப்ப மாலிகை தரித்தோன்
கடினமே மிகுத்துத் துடினமாய் நடந்து
மிஞ்சுகுதி கொண்டு அஞ்சுகெதி கொண்டு
திடமாக வலசாரி யிடசாரி மிகமீறி
இதவான குணமாக அதிவேக மெனநாடி
மிகுமண்ட கூட முகடண்ட மேவத்
தத்தியே எழுந்து தரியலார் கலங்க

புராதனம் - பழமையானது. விஸ்த்தாரன் வித்தாரன் - வித்தாரி - விற்பன்னன். சாளரம் - சன்னல். மதிள்- மதில் பிரகாரம், சிகரி - கோபுரம். ஐந்தரு - பஞ்சதரு, அவை அரிசந்தனம், கற்ப தரு, சந்தனம், பாரிசாதம், மந்தாரம். சதுர் - நான்கு. வாகர் - வாழ்நன். வாரணம் - யானை. மஞ்சம் - கட்டில். மங்களம்- மங் கலம், பொலிவு. சகலர் - எல்லோர், மூவகை ஆன்மாக்களில் ஒரு வர், மும்மலம் உடைய உயிர்கள். மாலிகை – மாலை. துடி - வேகம். வலசாரி - வலமாகச் சுற்றுதல். இடசாரி – இடப்பக்கமாக வரும் படை. தரியலார் - தரியலர் - பகைவர், பொருப்பு - மலை-

வெற்றியே செறிந்த விசயவாம் பரியான்
மதமுடன் பொருப்பை மருப்பினாற் குத்தி
அதிரவு மிடித்து அள்ளியே விசிறி
சத்த மிகுந்தொரு மித்து நடந்துறு
பத்தலர் தங்கள் சிரத்தை வளைத்துப்
பிடித்து முறுக்கி அடிக்குள் நொறுக்கி
மிதித்து மனங்கள் கதித்து நடந்து
செம்மையாய் வந்த செறுநரைத் தாக்கி
மும்மத மீறி முழங்குகுஞ் சரத்தான்
இஷ்டமாய்த் தேவர் யாவரும் போற்றத்
திட்டமாய் வளரும் சேவலங் கொடியான்
மேளவாத் தியமும் விளங்கும்பூ ரிகையும்
தாளமத் தளமுந் தவிலுடன் துடியும்
ஊதிய சங்கும் உகந்தபே ரிகையும்
மூதண்ட கூட முழங்கும் முரசான்
ஏற்கையாய் வளரும் ஈரேழு லோகமும்
ஆக்கினாச் சக்கரத் தடங்கவே செலுத்தும்
தோகைமா மயிலான் சூர்தனைக் கடிந்து
வேகமாய் மீளும் வெற்றிவே லுடையான்
குஞ்சரி வள்ளி குணமுடன் சேர்ந்த
மிஞ்சிய புயத்தான் வேதமந் திரத்தான்
தரைபுகழ்க் கந்தன் சண்முக வேலன்
அரனருள் மைந்தன் அறுமுக வேலன்
வானவர் போற்ற வளர்முரு கேசன்
தானவர்க் கின்பந் தருமுரு கேசன்
பூதலம் போற்றிப் புகழ்முரு கேசன்
மாதவர் துதிக்க வளர்முரு கேசன்
மனமகிழ் வாய்த்திரு மஞ்சன மாடிக்
கனம்பெறு கலிங்கங் களையுடன் தரித்து
பூசிய கந்தம் புழுகுசவ் வாது
வாசனை சேரு மருமலர் சூடி

மருப்பு - யானைத்தந்தம். செறுநர் - போர் வீரர். மும்மதம் - யானையின் கன்னமதம், கைம்மதம், கோச மதம். குஞ்சரம் - யானை. ஆக்கினை - கட்டளை, சூர் - சூரபன்மன். குஞ்சரி - தெய்வயானை. திருமஞ்சனம் - திரு முழுக்கு. கனம் - பெருமை. கலிங்கம் - போர்வை. களை - அழகு, கந்தம் - சந்தனக் குழம்பு.

அன்புடன் மிக்க அமுது கொண் டருளி
இன்பமா யடைகாய் இயல்புடன் தரித்து
மாணிக்கஞ் சிறக்க மகுடமுந் துலங்க
ஆணிப்பொன் சேர்ந்த அணிவயி டூரியக்
கடுக்கனும் பச்சைக் கபாயுடன் முத்துத்
தொடுத்திடும் அங்கி சுகமுடன் தரித்து
பத்தரை மாற்றுப் பசும்பொன் னாபரணமும்
இத்தல மெங்கும் இசைந்திடு பதக்கமு
முத்துத் துராயும் மோகன மாலையும்
மெத்த வனேக விதப்பணி தரித்து
மல்லிகை கடப்ப மாலிகை யுடனே
முல்லைமா லிகையு முளரியுந் தரித்து
மயில்தனி லேறி வாகுபன் னிருகரத்தில்
அயில்களுந் துலங்க அழகுருத் திராட்சக்
குடையுடன் மற்றக் குடைகளுஞ் சூழ
வடிவுறு சேவல் வளர்கொடி யுடனே
பொன்னால வட்டம் பொருந்திமுன் நடக்க
மின்னணி சின்னம் விருதுமுன் நடக்க
மிகுந்திடு முரசு விதம்பெற முழங்க
உகந்தவெண் சாமரை உபயமும் வீசத்
தேவர்கள் முனிவோர் சிறப்புடன் சூழப்
பூவையர் நடனம் புரிந்துமுன் நடக்க
அனநடை மாதர் ஆலத்தி யேந்த
தனமிகு மடவார் சங்கீதம் பாட
அந்தணர் வேதம் அகமகிழ்ந் துரைக்கச்
செந்தமிழ் வாணர் சீருரை கூற
மட்டுக ளில்லா வளமைக ளுடனே
இஷ்டப் பவனி யியல்புது மறுகில்
வந்தது கண்டு வாலமோ கினியாள்
சிந்தையு மயங்கித் தியங்கியே மையல்

அடைகாய் - வெற்றிலைப் பாக்கு. கபாய் - நிலையங்கி, ஆபரணத்தில் தொங்கணி. அங்கி - சட்டை. துராய் - தலையணைவகை வாகு - அழகு, தோள். அயில் - அழகு வேல், ஆலவட்டம் - விசிறி. விருது - கொடி, உபயம் - இரண்டு. அனநடை - அன்ன நடை - அன்னம் போன்ற நடை. ஆலத்தி - ஆரத்தி, நீராஞ்சனம் மட்டு - எல்லை. பவனி - உலாப் போதல். தியங்குதல் - சோர்தல் சஞ்சலப்படுதல், புத்தி மயங்குதல்.

மீறிய போதில் விண்மதி காயச்
சீறியே வந்து தென்றலும் பாய
மாங்குயில் கூவ மதன்கணை தாவ
ஏங்கியே கனலி லேற்றிய மெழுகாய்
உள்ளமு மெத்த உருகியே வாடி
மெள்ளவுஞ் சகியை விதமுட னழைத்து
வருந்துய ருரைக்க வண்மைசேர் பாங்கி
பொருந்தியே யின்ன புதுமையென் றறிந்து
ஆசையே மீறும் ஆடவ னிடத்தில்
நேசமாய் மாலை நிசமுடன் வாங்கி
வருகிறே னுந்தன் மனத்துயர் தீர
உரிமையாய் மனதி லுற்றிடுங் கருமங்
கண்டது போலக் கருத்துடன் உரைக்க
வண்டணி கூந்தல் வளர்குற மாதை
அழைத்துவா ரேனென் றறிவுடன் பாங்கி
தழைத்திடும் குறத்தி தன்னையே தேடிக்
குணமுடன் குறவர் குடில்தனை நாடி
மணமிகும் விராலி மலைதனிற் சென்று
குறத்தியைக் கண்டு கூட்டிவந் ததுவும்
சிறக்கவும் குறத்தி தெய்வத்தை வேண்டி
மனதினில் நினைத்த வகையெலாஞ் சொல்லித்
தனதுடன் வரிசைகள் தான்பெற்ற வாறுஞ்
சிங்கனும் வேட்டை திறமுடன் ஆடிச்
சிங்கியைத் தேடித் தியங்கிய போதில்
வந்திடக் கண்டு வார்த்தைகள் பேசி
சொந்தமா யிருவோர் சுகமுடன் சேர்ந்து
இருவருங் கூடி யிணங்கிநன் றாக
மருவிவாழ்ந் ததுவும் வாய்மைய தாக
நலந்திகழ் குழுமூர் நகர்தனில் கங்கை
குலந்தனில் வந்தக் குழந்தைவே லய்யன்
தருமா தவத்தில் தழைத்திடும் பிள்ளைப்

விண்மதி - சந்திரன். சகி - தோழி. வண்மை - அழகு, மெய்ம்மை
நேசம் - அன்பு. நிசம் - உண்மை. கருமம் - செயல். பாங்கி - தோழி
வரிசை - பரிசு.

பெருமா ளுகந்து பிரபல முடனே
கூறிய வின்பக் குறவஞ்சி தன்னில்
ஈறா தியிலே எங்கிருந் தாலும்
சீருடன் முத்தமிழ் சேர்ந்திடும் புலவோர்
பேர்பெறச் செய்யும் பெருமைக ளவர்க்கே

அகவல் முற்றும்

(கட்டியக்காரன் வருகை)

விருத்தம்

7. துய்யவெண் ணீறு பூசித்
துலங்கவே பாகு கட்டி
மெய்தனில் பணியும் பூண்டு
விதமுடன் சோமன் கட்டி
வையகம் புகழ்வி ராலி
மலைவடி வேலர் முன்னே
கைதனில் பிரம்பு மின்னக்
கட்டியக் காரன் வந்தான்

8. அண்டர்தொழ வேபுகழ் கொண்டாய்—பராக்கு
அற்புத மிகுந்தசிங்:காரா—பராக்கு 1
தொண்டருக் கன்புதருந் தூயா—பராக்கு
துலங்கிய விநாயகன் துணைவா—பராக்கு 2
வாசமலர் சூடுமுத் தைய்யா—பராக்கு
வள்ளிபுய மேவுமண வாளா—பராக்கு 3
வீசிவரும் ஈராறு கையா—பராக்கு
விதமான மயிலேறும் வீரா—பராக்கு 4
மாதுகுஞ் சரிமருவு நீதா—பராக்கு
மாகநவ;மணிவச்சிர மார்பா—பராக்கு 5
வேதமே வியசத்தி பாலா—பராக்கு
விண்ணவர்கள் துதிசெய்யும் வேலா—பராக்கு 6

---

7. பாகு - தலைப்பாகு. பணி - அணிகலன். சோமன் - சீலை

(விராலிமலை வேலவர் முன்பாக மோகனப் பாங்கி வருகிற விதம்)

விருத்தம்

9. சரிகைமின் னாடை கட்டித்
தரித்தபூ ஷணங்கள் மின்ன
முருகவிழ் மாலை சூடி
முகமலர்ந் தின்ப மாக
மருவுயர் விராலி வேலர்
மகிழ்வுறு கொலுமுன் பாகப்
பருவயிங் கிதமாய்ச் சொல்லும்
பாங்கியுந் தோன்றி னாளே

பாங்கி—தரு

10. மோகனப் பாங்கியும் வந்தாள்—சையோகமாக
மோகனப் பாங்கியும் வந்தாள்
நாகரீகர் விராலி நாதர்மேல் பதம்பாடி (மோகனப்)
கொங்கைக ளிரண்டுமின்ன கோலநடை யிலன்ன
செங்கைவளை கலகலென்னத் தெளிந்தசுகம் விற்பன்ன
(மோகனப்) 1

செண்பக மலர்மேனி சேர்க்கைமிகும் நிதானி
நண்புறுங் கலைக்கியானி நாரியர்க் கபிமானி
(மோகனப்) 2

விந்தைவிழி யைமீட்டி வேண்டும்பணி கள்பூட்டி
கந்தமலர்க் கைநீட்டிக் கந்தர் விராலி நாட்டில்
(மோகனப்) 3

---

9. கொலு - திருவோலக்கம். இங்கிதம் - இனிமை, குறிப்பு.

10. சையோகம் - கூட்டம். நாகரீகம் - கண்ணோட்டமுடையவர். பதம் - சிந்து. விற்பன்னம் - அறிவு. நாரியர் - பெண்கள் அபிமானம் - விருப்பம்.

(மோகினி வருகை)

விருத்தம்

11. சதுமறை வாணர் போற்றும்
சண்முக வேல ரன்பாய்
இதவுறு மஞ்ஞை மீதில்
இலகிய பவனி கண்டு
அதிவித மையல் மீறி
ஆசையாய்ப் பணிகள் பூண்டு
மதிநுதல் திலத மின்ன
வாலமோ கினிவந் தாளே.

வசனம்

அயில்வேல் துலங்கு மயில் முருகேசன் வருபவனி கண்டு மால் மோகங் கொண்ட வாலமோகினியாள் கொலுவிற்கு வருகிற விதம். பராக்கு,

மோகினி—தரு

12. வால மோகினி மாது வந்தாள்-சிங்காரமாக
வால மோகினி மாது வந்தாள்
ஞாலம் புகழ் விராலி நாதர் மீதில் காதல் கொண்டு
(வால மோகினி)

கதிரொளி யெனநவ மணிதக தகதகெனப்
பதசரம் நிறைமணி கொலுசொலி குமுற
(வால மோகினி) 1

சரசமு மிகுகுண ரதிவடி வெனவளை
கரமதி லணிவளை கலகல கலென
(வால மோகினி) 2

அனநடை யிலுமிகு சுகநடை யெனவே
கனவட மிலகிய தனகிரி யசைய
(வால மோகினி) 3

---

11. மஞ்ஞை - மயில். மையல் - மோகம். திலதம் - சுட்டி, நெற்றித் திலகம்.

12. சிங்காரம் - அலங்காரம். ஞாலம் - நிலம்.

விருத்தம்

13. அந்தணர் சூழ்வி ராலி
அறுமுகர் மார்பி லுற்ற
விந்தைசேர் கடப்ப மாலை
மீதினி லாசை பூண்டு
சுந்தர மிகுந்த கொங்கை
துலங்குமோ கினியாள் வானிற்
சந்திரன் வரவே கண்டு
தான்மிக வருந்து வாளே

வசனம்

வந்த மோகினிப்பெண் மயலால் நொந்து அந்தியிலெழுந்த சந்திரனைக் கண்டு தன் சிந்தையில் துயரங்களைத் தான் சொல்லுகிற விதம். பராக்கு

நிலவு—தரு

எதுகுலகாம்போதி

14. பாற்கடலில் பெண்ணுடனே தீர்க்கமுடன் பிறந்திருந்தும்
பாவையரைக் காய்வதுண்டோ நிலவே—நாளும்
ஏற்கைதரும் வேல்முருகர் சேர்க்கையுடன் வந்தாலுன்
மார்க்கமுந்தா னெங்கே போமோ நிலவே 1

மேருவல மாகவரும் போதுதனஞ் செயனாலுன்
மேனியனல் ரூபமாச்சோ நிலவே—அல்லாலச்
சீருலவும் அரனுதலில் மேவும்விழி மேலிருந்த
தீர்க்கமதால் காயுறாயோ நிலவே 2

மா தருட பொருட்டாலுன் னாகமெல்லாந் தேய்ந்திருந்தும்
மருகவிங்கே வரலாமோ நிலவே—நிதம்
ஆதரவாய் வேல்முருகர் மாலைதந்து சேர்ந்தாலுன்
னாண்மை யெல்லாம் வீண்போமோ நிலவே 3

கலிப்பா

15. வாசமிகும் விராலிகிரி வடிவேல்முரு கரைக்கண்டு
ஆசைமிகத் தான்கொண் டதிகமய லால்வருந்தி
நேசமுடன் திங்கள்தனை நிந்தித்துப் பின்னுமவள்
ஓசையுறு தென்றலைக்கண் டுற்றதுயர் சொல்வாளே.

---

14. மார்க்கம் - வழி.
15, மயல் - மயக்கம், காம விருப்பம்.

வ்சனம்

சோமனை யெதிர்த்த காமினியாகிய மோகினிப் பெண் மலைத்தென்றல் எழுந்து வந்தது கண்டு, மனத்தினில் துயரந்தான் வழுத்துகிற விதம் - பராக்கு.

தென்றல்-தரு

16. தமிழ்முனி மலைவாழும் தென்றலே - எந்தன்
தமிழ் மீறச் சீறாதே தென்றலே
அமலரா பரணங்காண் தென்றலே - கிட்ட
அடுக்காமல் அகலநில் தென்றலே 1

சித்தச னேறிய தென்றலே - என்னைச்
சீறிவருத் தாதே தென்றலே
புத்தியோ உனக்கிது தென்றலே - சும்மா
போஉந்த னிடந்தேடித் தென்றலே 2

தமிழ்வர்ம மென்மேல் வேண்டாந் தென்றலே - உனக்குத்
தருமமல்லச் சொன்னேன் தென்றலே
செம்மையுடன் வேலர் தென்றலே - வந்தால்
செய்வதென்ன உன்னால் தென்றலே
தமிழ்முனிமலை வாழும் தென்றலே 3

விருத்தம்

17. மின்னணி விராலி வேலர்
மீதினி லாசை பூண்டு
பொன்னணி தனங்கள் விம்மிப்
போதவே விரக மீறிக்
கன்னல்மென் மொழியாள் திங்கள்
காலையும் நீத்துப் பின்னும்
வன்னமாங் குயிலைக் கண்டு
மனமிக வருந்து வாளே.

வசனம்

இந்து தென்றலையும் நிந்தித்துத் தன்தாயக மறியாத குயிலைக்கண்டு தான் சொல்லுகிற விதம் - பராக்கு.

---

16. நிந்தித்தல் - இகழ்தல். சோமன் - சந்திரன். தமிழ் முனி-அகத்தியர். தமிழ்முனிமலை - பொதிய மலை. வர்மம் - உட்பகை.
17. விரகம் - காமநோய். இந்து - சந்திரன்.

குயில்-தரு

18. மன்மதன் வரக்கூவுங் குயிலே - விராலிமலை
வேலவர்க்குக் கூவாய் குயிலே
நன்மையோ உனக்கிது குயிலே - சும்மா
நாவோயும் பேசாதே குயிலே. (மன்மதன்) 1

தன்னன்னை யறியாத குயிலே - சற்றுஞ்
சலியாமல் கூவுகிறாய் குயிலே
சொன்னேனான் னுண்மைகேள் குயிலே - மெத்தச்
சுருக்காகக் கூவாதே குயிலே. (மன்மதன்) 2

தாயக மறியாத குயிலே - என்மேல்
சலமாகக் கூவாதே குயிலே
மாயன் மருகேசன் குயிலே - வேலர்
வந்தால்நீ யென்செய்வாய் குயிலே (மன்மதன்) 3

கலிப்பா

19. அஷ்டதிக்கும் புகழ்விராலி அறுமுகர்மே லாசை கொண்டு
வட்டமுலை மீறிமையல் வளர்வால மோகினியாள்
இஷ்டமுறு மிந்துதென்ற லிசைந்தகுயில் நீத்து
துஷ்டமதன் பேரிகையை தூஷணித்துச் சொல்வாளே.

வசனம்

மதியையுந் தென்றலையும் குயிலையுஞ் சினந்து, அதிவிரக மீறிய மோகினிப்பெண், மதனுட முரசாகிய அலைகடலைக் கண்டு சொல்லுகிற விதம் - பராக்கு

கடல்-தரு

20. சங்குமுத்த முன்பாலுண்டு சங்குமுத்த
மென்பாலுண்டு - வாரணமே
வங்கஞ்சேர்வ துன்பாலுண்டு வங்கஞ்சேர்வ
தென்பாலுண்டு - வாரணமே. 1

சிகரமின்ன லுன்பால்தன சிகரமின்ன
லென்பாலுண்டு - வாரணமே
மகரமீறுவ துன்பால்விழி மகரமீறுவ
தென்பாலுண்டு - வாரணமே 2

---

18. சுருக்கு - விரைவு.
19. தூஷணம் - தூடணம் - இகழ்ந்து பேசுதல்.

ஓசையார்வ துன்பாலுண்டு ஓசையார்வ
தென்பாலுண்டு - வாரணமே
வாசமலர் உன்பாலுண்டு வாசமல
ரென்பாலுண்டு - வாரணமே 3
பொங்குநதி உன்பால்மோகம் பொங்குநதி
யென்பாலுண்டு - வாரணமே
செங்கைவடி வேல்முருகர் தினம்வந்தா
லென்னசெய்வாய் - வாரணமே. 4

விருத்தம்

21. தேங்குயர் விராலி வெற்பில்
செழித்தசண் முகவர் மீதில்
பாங்குட னாசை கொண்ட
பதுமினி விரக மீறி
ஓங்கிய இந்து தென்ற
லொலிகுயில் கடலும் நீத்துப்
பூங்கணை மதனைக் கண்டு
புலம்பியே வருந்து வாளே.

வசனம்

பொங்கிய மயலால் கொங்கை யிரண்டும் மீறியும் மங்கை மோகினியாள் அங்கசனாகிய மன்மதனைப் பார்த்துச்சொல்லுகிற விதம் - பராக்கு.

மன்மதன்—தரு

மோகனம்

22. மோகநான் கொண்டதால் கோபமுனக்கென்ன மன்மதா - வெகு
மூர்க்கமுடன் கணையிரிய நோக்கி விடுகிறாய் மன்மதா (மோகம்) 1

ஆகம ரூபியாய்ப் போயுமுனக்கென்ன மன்மதா - இந்த
ஆணவ மிக்கை யேன்சும்மா வீணுக் கலைகிறாய் மன்மதா (மோகம்) 2

---

20. வாரணம் - கடல். வங்கம் - அலை, மரக்கலம். மகரம்- சுறாமீன்.

21. பதுமினி - நால்வகைப் பெண்டிரில் உத்தம இலக்கணம் உடையவள்.

வாவியில் மேவிய பூவெடுத் தேவரும் மன்மதா - என் மேல்
வாதாடி யேமெத்தப் போராட்டஞ் செய்யாதே மன்மதா 3

பூவையர் சூழ யிருந்து வளர்கின்ற மன்மதா - என்மேல்
பூவாளி யெய்வதும் நீதியோ தானிது மன்மதா (மோகம்) 4

இக்கு வளைத்தென்னை இலக்காக செய்யாதடா மன்மதா - உனக்
கென்மீதி லேகன வர்மந்தா னேதடா மன்மதா 5

மிக்குபுகழ் வடிவேலர் வருவார்காண் மன்மதா - சும்மா
மேலுக்காக உந்தன்கொலுக் கூடஞ்சேரடா மன்மதா 6

மோகநான் கொண்டதால் கோபம்உனக் கென்ன மன்மதா

வசனம்

ஓதிமப் பிள்ளையும் பேசுமஞ்சுகத்தையுஞ் சாதிமாங் குயிலை யும் போதவே மிகுந்த வண்டினத்தையும் கண்டு சொல்லுகிற விதம் - பராக்கு.

(ஓதிமம்)—தரு

23. அன்னமேநான் சொன்னபடி கேளும் வாரு - மந்த
தமயந்தியுடன் சென்றுரைத்து அன்பாய்ப் பாரும் 1

பொன்னணியும் விராலிமேல் முருகரை நீருங் - கண்டு
போற்றி செய்தென் காதல்சொல்லிக் கூட்டி வாரும் 2

அஞ்சுகமே பூவையே யெந்நாளுங் காணே னெந்தன்
ஆசைகேளு முங்கள் ஆதரவு வேணும் 3

கொஞ்சுமயில் முருகரைக் கண்டுதானும் - நான்
கொண்டமோக மெல்லாம் விண்டுகூற வேணும் 4

வண்டுகளென் மையல் சொல்லயிங்கே வாரும்
விண்டமலரில் மதுவுண்டு முகங்கள் மனதுமீறும் 5

அண்டர்தொழும் விராலிகிரி மீதிலமரரும் - போற்றும்
அறுமுகவர் மார்பில் மாலைவாங்கித் தாரும். 6

22. ஆணவம் - செருக்கு. பூவாளி - மலர்க்கணை. இக்கு - கரும்பு. கரும்புவில்.

23. ஓதிமம் - அன்னம். அஞ்சுகம் - கிளி. பூவை - குயில். ஆதரவு - உதவி. விண்டு கூறல் - எடுத்துக் கூறல். அண்டர் - வானோர்.

வசனம்

அந்தியிலெழுந்த சந்திரன் தன்னையும் மந்தரத்துற்று வந்த தென்றலையும் உகந்திடு குயிலும் ஒலிகடல் தனையும் வந்துமுன் னெதிர்த்த மன்மதன் தனையும் சினந்து, முன்வந்த சிறந்த மோகினியாள் நண்புறு சகியை இன்பமாய்க் கண்டு, தன்துயரு ரைத்து அன்புடன் வருந்துகிற விதம்-பராக்கு.

விருத்தம்

24. வேதமே வியவி ராலி வேலவர் மீதி லேநான்
போதவே கொண்ட மோகம் பொறுக்கவுங் கூடு தில்லை
சாதக மிகும்பி ராண சகியெனு மாதே கேளாய்
ஆதர வாக மோகம் ஆற்றவுங் கூறு வாயே.

வசனம்

மையல் கொண்டு மயங்கி நான் இப்படி வருத்தப்படுகிறது சற்றும் மனதிரக்க மில்லையோ சொல்லடி, சகியே.

மறு - வசனம்

ஆசை மீறிய மாதரைப் பிரகாசமான கலைமதியும், வாச மாகிய கந்த மந்தமாருதமும் தேமாங் குயிலும், பூமன் கணையும் வருத்துவது சகசந்தானல்லவோ. பெண்ணே.

(மோகினி தன் நிலை கூறல்)

தரு

ஆனந்த பைரவி

25. மையல்கொண்டே னென்ன செய்வேன் மானே— நிதம்
வையம் புகழ்வி ராலிகிரி வடிவேலர் மீதில்
(மையல் கொண்டேன்)

திங்களன லாகவென்மேல் காய—மலைத்
தென்றல்புலி போலெழுந்து சீறிவந்து—பாயப்
பொங்கமதன் கணைமுனைகள் தேய—நிதம்
பொருதக் குயில் கூவ மோகம் பொங்கிக்கலை—தேய
(மையல் கொண்டேன்) 1

---

24. பிராணசகி - உயிர்த்தோழி. மந்த மாருதம் - சிறுதென்றல். பூமன் - காமன். சகசம் - இயற்கை.

செண்டுமுலை யிரண்டும் விம்மி நெருக்க—மலர்ச்
செங்கைவளை சோர்ந்து மெத்தத் தியக்க—முந்தான்
பெருகக் கொண்ட விரக மனத்தை யுருக்க—அலை
குமுறுந் தொனியி னாலென் னுடல் குழைந்து—விருவிருக்க
(மையல் கொண்டேன்) 2

(உயிர்த்தோழி தேற்றுதல்)

விருத்தம்

26. சிந்தையில் துயரம் வேண்டாம்
தேன்மொழி மானே கேளாய்
மந்தரம் நிகர்வி ராலி
மலைக்குற வஞ்சி வந்தால்
புந்தியில் நினைத்த தெல்லாம்
பொருந்தவே சொல்ல வல்லாள்
கந்தர்தன் நாட்டில் சென்று
கண்டுநான் வரச்சொல் வேனே.

வசனம்

வாராய் வாலமோகினியே. நினைத்த காரியம் உச்சிதமாகச் சொல்லவல்லவளாய் விராலி மாமலைக் குறத்தி வந்திருக்கிறாள். அவளை அழைத்து வருகிறேன். அவளைக் கண்டு குறி சொல்லச் சொல்லிக் கேளும் பெண்ணே.

ஆனால் அப்படியே அழைத்து வாராய் பிராண சகியே.

(குறத்தி வருகை)

அகவல்

27. குணமிகும் நாரி குலாவும்விஸ் தாரி
இணைமுலை மீறி இலங்குமொய் யாரி
சித்தசன் மோகந் தெளிந்தசொற் பாக
மெத்தவை போக மிகுநாக ரீகம்
நடையினி லன்னம் நளினவிற் பன்னம்
இடைதனில் மின்ன லிசையும் யவ்வன
மதனபி மானி வளர்கலைக் கியானி

26. மந்தரம் - தேவலோகம். புந்தி - மனம்.
27. ஒய்யாரி - அலங்காரமானவள். இதம் - இனிய சொல் மேட்டி - இறுமாப்பு. பேடு - பெண். துலுக்குதல் - குலுக்கல். கந்தரம் - கழுத்து. பலுக்குதல் - பேசுதல். மெலுக்கு -

இதவில் நிதானி இலகுபொன் மேனி
மன்னர்கள் மேட்டி வளர்சுகங் காட்டி
மின்னுகை நீட்டி விழிவலை மீட்டி
மாங்குயில் பேடு மதரதிக் கீடு
பூங்கிளி மொழியும் பொருகணை விழியு
மெய்வகை நெளிப்பும் விரிமலர்த் துளிப்புங்
கைவளைத் துலுக்குங் கந்தரப் பலுக்குங்
கொஞ்சிய நகைப்புங் குளிர்ந்தமெய்ச் சிகப்பு
மிஞ்சிய மெலுக்கு மின்முலைத் துலுக்கும்
பரிமளப் பூச்சும் பனிமொழிப் பேச்சு
மருவிழி வீச்சு மிசைநெடு மூச்சும்
புனைதுகி லழகும் பொருந்துமே கலையுங்
கனதன மீதிற் கச்சையுந் துலங்க
மார்பினில் பதக்க மணிவடஞ் சிறக்க
சீர்பெறு பவழமுஞ் சிறந்தமுத் தாரமும்
மோகன மாலையு முழுமணிக் கோர்வையுஞ்
சேகர முடனே சிறந்தபூ ஷணமும்
மின்னிய வளையும் விரலில்மோ திரமும்
பொன்னணிக் கடையும் பூட்டிய வகையுஞ்
சிலம்புடன் கொலுசு சிறக்கவு மிலங்க
நலம்பெறு சதங்கை நாதமுந் துலங்க
பாத சரமும் பருவிரல் மெட்டியுங்
காதினி லோலையுங் கதித்திடு சுட்டியு
மூக்குத்தி முத்து முகத்தினி விலங்கப்
பார்க்கவு மின்பம் பரிவுடன் தோன்றக்
கொண்டையில் முத்துக் குச்சுக ளசையக்
கெண்டைசேர் விழியில் கீறிய மையும்
வக்கர மணியும் வளைமணிச் சரமும்
மிக்கபொன் னாரம் விதவித மாகக்
குஞ்சுமா ராப்புங் குளிர்ந்த வீறாப்பு
மஞ்சள் பிரகாசமும் மருமலர் வாசமு
மஞ்சித் திடைதனிலே சேர்க்குறப் பெட்டியும்
நெற்றியில் திலதம் நிகரிகென் றிலங்க

வெளியலங்காரம், மென்மை. பூஷணம் - அணிகலம். பாத சரம் - காலணி. வக்கிரமணி - கொடுமை மிக்க கண்கள் வீறாப்பு - இறுமாப்பு.

வச்சிரஞ் சிறந்த மாத்திரைக் கோலும்
உச்சித மாக உரைத்திடுங் குறியுங்
கண்டவர் தங்கள் கருத்துகள் மயங்கி
விண்டலந் தங்கு மேனகை தானோ
நாககன் னிகையோ நலமிகு ரதியோ
தோகையர்க் கரசோ துலங்குபொன் மகளோ
என்னவு மன்ன ரிதவுகள் பேச
மின்னணி விராலி வெற்பினி லிருந்து
காலினிற் சிலம்பு கலின்கலி னென்ன
வாலிப மின்குற வஞ்சிவந் தனளே.

தரு

மத்தியமாவதி

28. சரணம் பகவதி கௌரி புதல்வனே
சரணம் கசமுக விநாயகா சரணம்
மதியணி அமலரா னந்த சரணம்
உமைமண வாளனே சரணம் சரணம் 1

சரணம் திருவுறை கமல மார்பனே
சரணம் ராமாவ தாரவா சரணம்
கருமுகில் மேனி மாதவா சரணம்
வேங்கிட மாயவா சரணம் சரணம் 2

சரணம் சரவண முருக குருபர
சரணம் வளர்மயில் வாக சரணம்
கலைமகள் மருவு புயம்நிறை சரணம்
தெய்வானை நாயகா சரணம் சரணம் 3

திரை - தரு

29. அழகு திருவிலு முருவ மிவளென
அரசர் மயல்மிக—மீறவே
இளமை மதிநுத விலக அனநடை
இசைய இதழமு—தூறவே
குறவஞ்சி வந்தாள் 1

---

28. சரணம் - வணக்கம்.
29. சரப்பணி - வயிரக் கழுத்தணி.

தங்கச் சரப்பணி தும்பிப் பதக்கமும்
கொங்கைக் கிரியுந்—துலங்கவே
செங்கைச் சிலைவேள் கலங்கச் சதங்கைச்
சிலம்புத் தொனியு—மிலங்கவே
குறவஞ்சி வந்தாள் 2

வட்ட மதிநுதல் சுட்டி தனிலுறும்
வச்சிரம் நிகநிக—நிகெனவே
சட்ட முடன்குறப் பொட்டியும் ரத்தினத்
தாழ்வடந் தகதக—தகெனவே
குறவஞ்சி வந்தாள் 3

காலில் கொலுசுடன் சதங்கை பாட
கங்கணத் தண்டைக—ளசையவே
நீல மயில்முரு கேச ரெனும்வடி
வேலர் வளர்திரு—நாட்டினில்
குறவஞ்சி வந்தாள் 4

வேறு – தரு

30. வஞ்சி வந்தாளய்யா ஒய்யாரக்—குற
வஞ்சி வந்தாளய்யா

வஞ்சி மருமலர் சூடி
வளர்மோ கனராகம் பாடி
வஞ்ச மதன்கண் ணாடி
வாலமோ கினியைத் தேடி
—வஞ்சி வந்தாளய்யா 1

பச்சைப் பரிமளம் பூசிப்
பவழவிரம் கையை வீசி
மெச்சுமஞ் சுகங்போற் பேசி
மின்னார்க் குண்மைசொல் மகராசி
—வஞ்சி வந்தாளய்யா 2

சிந்துரத் திலதந் தீட்டிச்
செண்டுமுலை யிரண்டுங் காட்டிச்
சுந்தரப் பணிகள் பூட்டித்
துரைவே லர்திரு நாட்டுல் —வஞ்சி வந்தாளய்யா 3

---

30. திலதம் -நெற்றிப்பொட்டு

வேறு - தரு

31. வந்தனளே குறவஞ்சி—சிங்காரமாக
வந்தனளே குறவஞ்சி
குங்குமக் கொங்கைக் குடங்கள் குலுங்கவே
மங்கை மருங்கிடை வஞ்சியைப் போல
(வந்தனளே) 1

கந்த மிகுந்த கதம்ப மணிந்திடு
அந்த மிகுந்தமை யந்தியைப் போல
(வந்தனளே) 2

விந்தை யுடன்திகழ் குஞ்சரி பங்கிலு
கந்து மணர்புணர் கந்தர்தன் னாட்டில்
(வந்தனளே) 3

வேறு – தரு

32. வந்தாளய்யா குறவஞ்சி—மிகு
சுந்தரமேவிய துரைவேலர்தன் னாட்டில்
(வந்தாளய்யா) 6

தங்க வடங்க ளிலங்க—முத்துத்
தாவட மேகலை தானுந்—துலங்கச்
செங்கை வளைகள் குலுங்க—இணை
சேர்ந்திடு கொங்கை சிறந்து—குலுங்க
(வந்தாளய்யா) 1

சந்தனஞ் சவ்வாது பூசி—மிக்க
சரசஇங் கிதமான தயவாகப்—பேசி
விந்தை விழிவலை வீசி—நல்ல
விதமான குறிசொல்ல மிகுந்த—பிரயாசி
(வந்தாளய்யா) 2

வாசமலர்க் கையை நீட்டி—ரேகையை
மாத்திரைக் கோலினால் வரிசையாய்க்—காட்டி
ஆசை மன்மத வேள்கண் ணாட்டி—விராலி
அறுமுக வடிவேல ரன்புசேர்—நாட்டில்
(வந்தாளய்யா)

---

31. வஞ்சி - வஞ்சிக் கொடி
32. தாவடம் - கழுத்தணி மணிமாலை, கண்ணாட்டி - மனைவி.

வசனம்

மோகங் கொண்ட நாகரீக மோகினியிடத்தில் யோகஞ் சேருங் குறி சொல்ல வந்த குறவஞ்சி மாது, — தராதலம் துதிக்கும் விராலி யங்கிரி வாசனுடைய வாசலின் வளமை நேசமாய் சொல்லுகிற விதம்—பராக்கு

வாசல்-தரு

33 திருமகளுங் கலைமகளும்—அம்மே
செழித்திருக்கும் வாசலிது
மருவுறையும் விராலிநக ராளும்
வடிவேலன் வாசலிது—அம்மே 1

இந்திரரும் வானவரும்—அம்மே
இறையவரும் மறையவரும்
சந்திரரும் சூரியரும்—அம்மே
தழைத் தோங்கும் வாசலிது 2

சத்தரிஷி யீசுவரர்கள்—அம்மே
தவம்பெருகும் வாசலிது
சித்திநவ சித்தர்களும்—அம்மே
தெண்டனிடும் வாசலிது 3

பெரியதவ மாமுனிவோர் வந்து
பேறுபெற்ற வாசலிது—அம்மே
அரியசது மறைவாணர்—அம்மே
அன்புசெய்யும் வாசலிது 4

பைந்தமிழ்சேர் வாணருக்கும்—அம்மே
பட்சமுள்ளப் பத்தருக்குஞ்
சந்தான சௌபாக்கியம்—அம்மே
தந்தருளும் வாசலிது 5

பச்சைமயில் சிறை விரித்து நின்று
பணிந்து நிற்கும் வாசலிது—அம்மே
உச்சிதமாஞ் சேவல் கொடி—அம்மே
ஒளிவிளங்கும் வாசலிது 6

---

33. மரு - மணம், மலை. தெண்டனிடுதல் - வணங்குதல். சந்தானம் - சந்ததி. சௌபாக்கியம் - மிகு செல்வம் பரிசனம் - ஏவல் செய்வோர்.

தேவகன்னிகள் திருநடனம்—அம்மே
சிறந்திலங்கும் வாசலிது
கோவில்பரி சனங்களெல்லாம் வந்து
கூட்டமிடும் வாசலிது—அம்மே 7

மருக்குலவுந் திருவுறையுஞ் செங்கண்
மால்மருகன் வாசலிது
திருக்கடப்ப மாலைபுனை—அம்மே
செயவேலன் வாசலிது 8

பாங்கி—மோகினிப் பெண் உரையாடல்

வசனம்

அகோ வாராய் வால மோகினியே. நீ அழைத்து வரச் சொன்ன படிக்கு விராலிமலைக் குறத்திதனை அழைத்து வந்தேன் உன் மனத்தில் உதித்தக் காரியம் கேளும் பெண்ணே.

ஆனாலப்படியே கேட்கிறேன் பிராண சகியே.

(மோகினிப் பெண்—குறத்தி உரையாடல்)

விருத்தம்

34. சுந்தர மிகும்வி ராலித்
துரைவடி வேலர் நாட்டில்
அந்தமாங் குறத்தி யேயுன்
னாண்மையும் வடிவும் போல
இந்திரலோ கத்தி லில்லை
என்னுடத் தவத்தால் கண்டேன்
வந்துதா னுங்கள் சாதி
வளமெல்லாம் வழுத்து வாயே.

வசனம்

அகோ வாராய் குறவஞ்சி மாதே. உன்னைக் கண்டபோதே. மனதினில் நினைத்த காரியம் எல்லாங் கைக்கூடுமென்று மகா சந்தோஷ மாச்சுது. ஆனாலுங்களுடச் சாதியும் சாதி வளப்பமும் இன்னதென்று சொல்லும் பெண்ணே.

ஆனாலப்படியே சொல்லுகிறேன், கேளீரம்மே.

---

34. சுந்தரம் - அழகு. அந்தம் - அழகு.

(குறந்தி தன் சாதி வளம் கூறல்)

34. அம்மம்மே ஏ பெரியம்மே
எங்கள் சாதி சொல்லவேணு மென்றண்டல்லோ
—கேட்கிறாய்
எங்கள் சாதி சொல்ல வேணுமா;
சாதியர் நாட்டுக் குறத்தி யென்றுங்
கொச்சைக் குறத்தி யென்றும்
தெய்வக் குறத்தி யென்றும்
மலையாளக் குறத்தி யென்றும்
நாலு சாதியுண்டு அதிலே நாங்கள்
தெய்வக் குறத்தி, தெய்வக் குறத்திய ரம்மே.

தரு

36. மாதே யெங்கள் சாதி சொல்லக் கேளும்
மரியாதை யானமகா சாதி
நீதிவடி வேலவர்மே லாசை
நேசமதாய்க் கொண்ட மோகினியே. 1

வெள்ளிமலை யீசர்தன் சாதியை
விளங்கின போதந்த ஈஸ்வரனார்
உள்ளபடி யுங்களுட சாதி
உச்சித மென்று மழுவெடுத்தார் 2

மாயன்றனைக் கண்ட வன்சாதி
வளங்களை யெல்வாம் விளங்கினதில்
நேயமுட னுங்களுட சாதி
நேர்த்தி யென்றே கையை நெய்யிலிட்டார் 3

கன்னல்சிலை வேள்மதன் சாதியைக்
கண்டறிவோ மென்று போனோன்
தன்னெஞ்சு தனிலழுக்க முண்டாய்த்தான்
கண்ணில்கா ணாச்சடலங் கொண்டான் 4

மானேவடி வேலர்க்கு நாங்கள்
மாதைக் கொடுத்தவகை கேளும்
கானந்தனி லேவவிய வந்து
கைக்கொண்டா ரெங்கள்குலக் கன்னியை 5

செண்டுமுலை மாதரசே நாங்கள்
செல்வஞ் சிறந்ததெய்வச் சாதி
அண்டர்தொழும் வேலவர்நன் னாட்டில்
ஆதரவாய் வாழு மோகினியே. 6

---

36. உச்சிதம் - அரியது. மேன்மையானது.

வேறு — தரு

எங்கள் சாதி வளமைகே ளம்மே - விராலிவேலர்
இலங்கும் நாட்டினில் துலங்கும் மோகினியே 1
பசுங்களபக் கொங்கை நிறையக் கெந்தந் தரிப்போம்
அக்குமணிக் கோர்வைகள் அதிசீராய்த் தரிப்போம். 2
நறுங்குறிஞ்சி மலர்முடித்துச் சிங்காயடிப்போம்
பெண்களுடன் வாது பேசிக் கீதம்படிப்போம் 3
அனுதினமும் நலமுடன் குறம்பாடி யாடுவோம்
வைத்துசிங்க னைநயந்து பின்பு கலந்து கூடுவோம் 4
சிந்தை மகிழ்ந்து குழந்தையைப் பெற்று நாங்களெடுப்போம்
உகந்தகாயங் கூட்டிக்குறவன் குடிக்கக் கொடுப்போம் 5
கேட்டபேர்க்கு வளம்பெறக் குறியுரைத்து வெல்லுவோம்
கையில் ரேகை மாத்திரைக் கோலால் நீட்டிச் சொல்லுவோம் 6
தேக்கிலைதனிற் தேனுந்தினைமாத் தானருந்துவோம்
கணவனிருக்கச் சிறிய கொழுந்தன் சேரப் பொருந்துவோம் 7
தினைப்புனத்தில் மான்மயிலும் வந்தால் ஓட்டுவோம்
ஆனைசிங்கம் வந்தால் சரத்தைத் தொடுத்து வாட்டுவோம் 8
கறிசமைக்கப் பூனைகுத்த மனது பொருந்தோம்
ஆனைகுத்திப் பொறிக்கறிக ளில்லாம லருந்தோம் 9
இலங்கிவளர் கானமயில் வேலன் பதத்தைப்
பரவிநித்தங் கருத்திலிருத்தி மிகவுந் துதிப்போம் 10
மணங்கள் செய்தால் அவர்க்கெல்லாம் கந்தம் பூசுவோம்
அஞ்சுபணம் வரிசையாகப் பரிசம் பேசுவோம் 11
இருகரமுஞ் சொந்தமாகப் பாவித்து வாங்குவோம்
பெண்ணை மணம் சூடிக் கொடுத்துத் துயரம் நீங்குவோம் 12
சீதனங்கள் வரையிலச் சிலது விடுக்க விள்ளுவோம்
மானுதவும் வள்ளியம்மனை வாழ்த்திக் கொள்ளுவோம் 13
மாமனுடன் பரியாசத்துடன் பண்டு கூறுவோம்
மாமி சொன்னபடிக்கு நடந்து வார்த்தை மீறுவோம் 14

---

37. அக்குமணி - சங்குமணி. சிங்கியடித்தல் - ஒரு விளையாட்டு கூத்தாட்டு. வாது - தருக்கம். கீதம் - இசைப்பாட்டு குறம்- குறத்திப் பாட்டு. நயத்தல் - விரும்பல். காயம் - கடுகு, மிளகு, ஐங்காயம்- ஐந்து காயம், அஃது உள்ளி, கடுகு, சுக்கு, பெருங்காயம், மிளகு, தலைப் பிள்ளைக்கரு, கொளுந்தன் கணவனுடன் பிறந்தான். சரம் - அம்பு. பரிசம் சீதனம்.

அம்மே இன்னமெங்கள் சாதிவலிமை தான்சொல்ல
வென்றா லிசைந்து செல்லுமெட்டுக் கிழமைதான்
—விராலி நகர் 15
மன்னர் முருகர் நாட்டில் யோகமாய்
மீறிவளர் வாகினியே நிகராகு மோகினியே—அம்மே
அம்மே எங்கள் சாதிவலிமை கேளம்மே. 16

(மோகினி மலைவளம் வினவுதல்)

விருத்தம்

38. கங்கையருள் புதல்வனெனும் விராலிகிரி
மேவுந்திருக் கடம்பர் நாட்டில்
இங்கிதமாங் குறமாதே உங்களுட
சாதியெனக் கின்ப மாக
வங்கணமாய்ச் சொல்லினேன் சாதிவளப்
பமுமுரைத்த வண்மை போலச்
சங்கதியாய் நீயறிந்த மலைகளெல்லாம்
நானறியச் சாற்று வாயே

வசனம்

அகோ வாராய் பெண்ணே, குறமகளே. உங்களுட சாதியும் சாதி வளப்பமுங் கேட்டு மகா சந்தோஷ மாச்சுது. இனி நீ சஞ்சரித்து வந்த மலைகளெல்லாம் நானறியச் சொல்லும் பெண்ணே.

ஆனாலப்படியே சொல்லுகிறேன், கேளீரம்மே.

(குறத்தி மலைவளங் கூறுதல்)

தரு

39. தேசமெங்கும் நானறிந்து வந்த
திருமலை யெல்லாஞ் சொல்லக்கே—ளம்மே
ஈசனருள் முருகன் மேவுவிராலி நாட்டில்
இலங்கிவளரும் வால மோகினியே.
மருவுறையுரு தங்க மகமேரு
மகேஸ்வரன் வளர்வெள்ளி மாமலை
தருவுய ரஷ்டகுல பர்வதம் மந்திரகிரி
தழைக்கு மிமையகிரி தானறிவே—னம்மே.

38. வங்கணம் - நட்பு. சங்கதி - வரலாறு சாற்றுதல் - சொல்லுதல்.

வையமகிழ் பவளமலை நீலமலை
பச்சைமாமலை முதலாக
வெய்யோ னுதயகிரி விளங்கிய அஸ்தகிரி
விந்தை கிரியும் வடவேங்கிட—மம்மே
அருணகிரி விருத்தாசலம் வெகுஅன்பு சேர்ந்திடுங்
கொல்லி மாமலைதிரு வோங்கிமலை
இரத்தின கிரிசிரா மலையுடன் சீருயர்
சாமிமலை நானறிவே—னம்மே
நாரத மாமுனி மலைபி ரான்மலை
நற்கந்த மலைகழுக் குன்றமுஞ்
சீர்பெறு பரங்குன்றம் பொதியமா மலையுடன்
செழித்துவளர் சதுரகிரி யறிவே—னம்மே
ஆனமலை வராகமலை புவியில் அன்பர்க்
கருளுதவும் பழனிமலை வானுயர்ந்திடுஞ்
சோலைமலை வேள்மலை கருமலை வீரமலை
தோகைமலை யறிவே—னம்மே
இன்னம் வெகுகோடி மலைநாங்க ளிருந்தது
சொல்லமுடி யாதம்மே; அம்மே
மின்னணி வடிவேலர் விளங்கும் விராலிகிரி
மீதில்குடி யிருந்தோ மம்மே அம்மே

(மோகினி விராலி மலையின் மகிமையை வினவுதல்)

விருத்தம்

40. அருமறை முனிவர் போற்றும்
அறுமுக வேலர் நாட்டில்
திருமக ளென்ன வந்த
தேன்மொழிக் குறப்பெண் ணேநீ
உரிமையாய் மலைக ளெல்லாம்
உரைத்தது போல உங்கள்
மருவுயர் விராலி வெற்பின்
மகிமையை வழுத்து வாயே

வசனம்

அகோ, வாராய் பெண்ணே, குறமகளே, நீ அறிந்து வந்த மலைகளெல்லாஞ் சொல்லக் கேட்டு மகா சந்தோஷமாச்சுது. ஆனால் உங்கள் விராலிமலையிலுள்ள அதிசயமும் வளப்பமும் சொல்லும் பெண்ணே.

ஆனால், அப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

(விராலிமலை வளப்பம் கூறல்)

தரு

41 வாசமேவும் விராலி மாமலை
வளமை சொல்லக் கேளாய்
மறைவா ணருந்தமிழ் வாணரும்
மகிழ்ந்தே கலை புகல்வார்
நேசமாய் வளர்முனி வோர்களும்
ரிஷீஸ்பரர் முதலாய்
நித்தமும் வெகுபத்தி யாகவே
நின்றுதவம் புரிவார்
விண்ணார் சிங்கம் வரவேகண்டு
வேழமனந் திகைக்கும்
மேடம் வரக்கண் டேபுலி
மிகவும்சினந் ததட்டும்
தண்ணார் மதிமா னைப்புலி
தாவிமிகப் பாயுந்
தனியே கவிகட கம்வரத்
தானே கண்டு மிரளும்
மலர்மேல் வண்டு மோது மது
வழிந்தே மிகவோடும்
வருபானு வின்புரவி யின்கால்
வழுக்கி ரதஞ்ச ருக்கும்
நலமார் சங்கந் தவழுந் தத்தி
நாடிக்கயலை பாயும்
நயமாகிய சிப்பி முத்து
நழுவிமிதந் தோடும்
கவிகள் கமுகேறி நின்று
கதித்தே யசைந்தாடுங்
கன்னல் மிகச்சோ ரிமதி
செல்லும் வழிகாணும்
மயங்கும் இளங்கமு கோடினைப்
பெருக்கும் இவையாவு
மாய்க்கும் கதிரோன் றன்னைச்
சிவந்தகனி யென்றே
சிலமந் திகள்தா விமதி
தியங்கும் மனமயங்கும்

பசுவுங் கொடுபுலி யுஞ்சேர்ந்து
பரிவாய்ச் சுனைநீரைப்
பருகிக் கரையேறி வந்து
படுக்குமொரு தலத்தில்
இசைவாய் நாகங் கீரியுடன்
இணங்கி விளையாடும்
எலிபூனை கஞட னேசேர்ந்
திருந்தே மனம்பொருந்தும்
இன்னம் வெகுமகி மையுண்டு
இன்பமுடன் கேளாய்
எருமைவிரு ஷத்தின் பாலுண்
டிருப்பார் வெகுகாலம்
மின் னுஞ் சோதிப்புல் லுண்டதை
விரும்பிமிகப் பொசித்தால்
மேனி தங்கமய மாய்ப்புவி
மீதிலிருப் பார்கள்
நலஞ்சேர் கருநெல் லிக்க னி
யுண்டுஅதை யுண்டோர்
நரைமாறி யவ்வன மாகவெந்
நாளுமகிழ்ந் திருப்பார்
இலைகாய் மரமெல் லாமினித்
திருக்கு மொரு வேம்பு
இன்பமுடன் தின்றால் காய
மிறுகிச் சித்திபெறுவார்
பச்சிலை தனி லொன் றுண்டதனைப்
பறித்துத் திலத மிட்டால்
பதினாலுல கெல்லாம் சுற்றி
பார்த்துமிக வரலாம்
இச்சமாய்ப் பின்னுமொரு பச்சிலை
மெத்தவுந் தானுண்டு
வெள்ளீயமு மிரும்புஞ் செம்பு
மிகவுந்தங்கஞ் செய்யலாம்

---

41. வேழம் - யானை. மேடம் - ஆடு, கவி - குரங்கு. கடகம் - யானைக் கூட்டம். பானு - கதிரவன்.
எருமை விருட்சம் - எருமை. முன்னை - ஒரு மரம். பொசித்தல் - புசித்தல். காயம் - உடல். ரூபம் - உருவம்.

அன்பாய்ப் பின்னுமொரு பச்சிலை
அரைத்துத் திலதமிட்டால்
அடங்கா தவர்சேர் வார்வந்து
அழகிலும் மதனாவார்
இன்பமுட னொரு மூலிகை
யிருக்குமதைத் தரித்தால்
எண்ண மான ரூபமெடுத்
தியல்பாய்ச் சென்றுவரலாம்
எங்கள் மலைதனி லேசஞ்
சீவி முதலாக
இன்னம் வெகுகோ டிவளம்
இருக்குதடி யம்மே
துங்க மயில்மீ தில்வரும்
சுப்பிரமணியர் நாட்டில்
தோகை வடிவா கவளர்
மோகினியே கேளாய்

(மோகினி தேசங்களை வினவுதல்)

கலித்துறை

42. சூர்தனை வென்ற வடிவேல் முருகர் துலங்கும்வெற்பில்
வார்முலை மின்னு குறமயி லேசொந்த மாகவுங்கள்
கார்புனை வெற்பின் வளமையெல் லாம்சொன்ன
காரியம்போல்
சீருடன் நீகண்ட தேசமெல் லாமிப்பச் செப்புவாயே

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே, உங்கள் மலை வளமெல்லாம் கேட்டு மகா சந்தோஷமாச்சுது. இனி, நீயறிந்து வந்த தேசங்களையெல்லாம் சொல்லும் பெண்ணே.

மறு–வசனம்

ஆனால், அப்படியே சொல்லுகிறேன், கேளீரியம்மே.

(குறத்தி தான் கண்ட தேசங்களைக் கூறல்)

தரு

43. அவனிதனில் கண்டறிந்த தேசமெல்லாம்
அன்னமே நான் சொல்லக் கேளாய்
வளர்புவன மகிழ்வட காசிகல்யாணம்
பொருந்துங் கொல்லர் புதர் முதலாய்
(அவனிதனில்)

வங்காள மீராறு மலையாள மேழு
மாகதங் கச்சி கபாடம்வளர்
கொங்கங் குடகந் துளுவமுச் சீனங்கு
குதங்க லிங்கம் விலாடம் நல்ல
சிங்கள மீளுவஞ் சாளுவம் தேசம்
தெலுங்கு மாராட மிகு
கங்கந் துளுவங் கவுசிலை கேகயம்
கண்டிதேசந்திரி கூடம்உயர் கலிங்கம்
இங்கிதஞ்சேர் விராடங் கொச்சி காருட
தேசங் கர்நாடம்

(அவனிதனில்)

இந்துஸ்தானந் துலுக்காணங் கீர்வாண
மிசைவான கேரளம் தேசம்வளர்
சிந்து கபாடந் திராவிட மொட்டியஞ்
செழித்திடும் டில்லி விலாசம்வெகு
வீந்தைகள்சேர் கொல்லஞ் சோனகத் தாரையும்
வெல்வதுதான் பிற வாச மிகுந்தானே
அம்புவி தனிலெங்கும் சுற்றிவந் தேன்வெகு
தேசமெங்கள் துரைவோர் தேசந்தான்
வாசமெந்த துலங்கிவளரும் பிரகாசம்

அவனிதனில் கண்டறிந்த தேசமெல்லாம்
அன்னமே நான் சொல்லக் கேளாய்.

(மோகினி தலங்களை வினாவுதல்)

கொச்சகம்

44. சீரிலங்கு பச்சைமயில் செவ்வேள் விராலிவெற்பில்
பேரிலங்க வாழ்குறப் பெண்மயிலே நீகேளாய்
பாரிலுள்ள தேசமெல்லாம் பாங்காய் உரைத்தபடி
தாரணியில் கண்டதெய்வத் தலங்களெல்லாம் சொல்வாயே.

வசனம்

அகோ வாராய் பெண்ணே, குறமகளே, நீ அங்கங்கு சென்ற தேசங்களெல்லாம் சொல்லக் கேட்டு வெகு நேசமாய் மனது குளிர்ந்தது. இனி நீ தரிசனஞ் செய்து வந்த தெய்வத் தலங்களையெல்லாம் வரிசையாய்ச் சொல்லும் பெண்ணே.

ஆனால் அப்படியே சொல்லுகிறேன். கேளீரியம்மே.

(குறத்தி தான் கண்ட தலங்களைக் கூறுதல்)

தரு

45. சீரங்கம் திருவானைக் காவல்சி ராப்பள்ளி
திருவா வடுதுறை கண்ணபுரமும்
திருவையாறு கண்டியூர் குடந்தைமத் தியார்ச்சுனம்
சிதம்பரம் சீர்காழி முதலாய்
பேரம்ப லம்திருக் குற்றாலம் வேங்கிடம்
பேராக வளர்காஞ் சீபுரம்
பேரூர் திருவாரூர் வேளூர் மறைக்காடு
பெருந்துறை செங்காட்டங் குடியுமன்னார்
கோயில் திருவெண் காடு நாவலூர்
மாயூரந் திருவிடை மருதூர்
வளர்திரு வாடானை ராமேசு வரந்திரு
வடிஉத்திர கோச மங்கை
பொன்னார் திருச்செந்தூர் தென்காசி கூடலும்
பூவணந் திருக்கோட்டி யூரும்
புகழ்திரு வேடகஞ் சோலைமலை யின்பம்
பொருந்தி வளர்கழுக் குன்றம்
ஆவினங்குடி சிவகிரி சுப்பிர மணியமும்
வஞ்சிசெக னாதங் காசி
அண்ணாமலை கருவூர் கடம்பர் கோயில்
அழகுசி வாயம் வயலூர்
காவுயர் கதிர்காமம் வைகுந்த முதலாகக்
கைலா சமுமிக வறிவேன்
கதிக்கும் விராலி கிரிதன்னில் மேவிய
கந்தர் வளநாடு மறிவேன்.

(மோகினி விராலி நாட்டுவளம் வினாவுதல்)

விருத்தம்

46. பொன்மருவும் வேல்முருகர் விராலிகிரி
மீதிலன்பு பொருந்தி வாழும்
மின்மருவுங் கும்பமுலை வஞ்சியரே
ஒருவசனம் விளம்பக் கேளாய்
அன்புடனே கண்டதெய்வத் தலங்களெல்லாம்
உரைத்த வடிவழகு போல
இன்பமுடன் தென்விராலி நாட்டுவள
மெல்லாம்நீ இயம்பு வாயே.

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே, தேசத்தில் நீ கண்டு வந்த தெய்வத் தலங்களையெல்லாம் சொல்லக் கேட்டு நான் தரிச னஞ் செய்தாற் போலாச்சுது. வாசமகிழ் விராலிநன்னாடு மறிவோ மென்றாயே; அந்த நாட்டு வளங்களைச் சொல்ல வேணும் பெண்ணே.

ஆனால், அப்படியே சொல்கிறேன், கேளீரியம்மே.

(குறத்தி விராலி நாட்டு வளம் கூறல்)

தரு

47. சோலைதனில் முகிலைக்கண்டு
தோகைக யாடுந்
தொனிசேர் குயில் கூவிஇன்பத்
தோணரா கம்பாடுஞ்
சாலமலர் மீதினில் (வண்டு)
வாய்த்தித்திக் கூறுந்
தாவிக்கவி வாதில்கனி
மீதில்தா வுந்திரும்
பரிவாயினஞ் சிறந்து கூடிப்
பார்த்துமகிழ்ந் திருக்கும்
பகலான் பந்தமெனவே வந்து
பகரமுட னெறிக்குந்
துரிசாய்த் தென்றல் வீசும்மழைத்
துளிபோல் மலர்சொரியும்
துலங்கிவளர் குமுதமிந்துந்
தோணமுகை விரியும்
கனிவீழ்ரசம் பாய்ந்தே செந்நெல்
கதித்தே வளர்ந்திருக்கும்
கன்னல்மிகச் செழித்தேஇளங்
கமுகோடிணைப் பெருக்கும்
வசனமிகு விராலிகிரி
வடிவேலர் நாட்டின்
வளமைசொல்ல முடியாதெங்கள்
மாதரசே கேளாய்

---

47. இந்து - சந்திரன், முகை - மலரும் பருவத் தரும்பு. கன்னல் - வனசம் - தாமரை.

(மோகினி நதிவளம் வினவுதல்)

கலித்துறை

48. அடியார்க் கருளும் வடிவேல் முருகரன் பர்க்குநித்தங்
குடியா யிருக்கும் விராலி கிரியின் குறமகளே
துடியாய் விராலிநன் னாட்டின் வளங்களைச் சொன்னது
போலத்
திடமா யறிந்த நதிகளெல் லர்மிப்பச் செப்புவையே.

வசனம்

அகோ, வாரும் பெண்ணே, குறமகளே, வாசமேவிய விராலி நன்னாட்டின் வளமையைச் சொல்லக் கேட்டு வெகு நேசமாய் மனது சந்தோஷமாச்சுது. இனி நீ கண்ணாரக் கண்டு வந்த நதி களையெல்லாம் நன்றாகச் சொல்ல வேணும் பெண்ணே.

ஆனால். அப்படியே கேளீரியம்மே.

(குறத்தி நதிவளம் கூறல்)

தரு

49. புண்ணியநதி தீர்த்த மெல்லாம்
புகலக் கேளும் பெண்ணரசே
விண்ணவர்புகழ் விராலி வேலர்
பொன்னின் மாநதி போல (புண்ணிய)

கெங்கைநதி யமுனைநதி
கிருஷ்ணை வேணி சரசுவதி
துங்க பத்திரைகோ தாவரி
சொர்ண பத்திரை காவேரி (புண்ணிய)

சிந்து மணிமுத் தாநதி
சிறந்த பெண்ணை மாநதியுஞ்
சுந்த ரஞ்சேர் வேதநதி
துலங்கும் நர்மதா கவுரி (புண்ணிய)

வேகவதி தாம்பிர வேணி
விளங்குங் கன்னியா குமரி
வைகையோ கந்தரு மமரா
வதியுக்ந்த சண்முகநதி யறிவேன் (புண்ணிய)

(மோகினி குறத்தி கற்ற வித்தையை வினவுதல்)

கலிப்பா

50. தென்னவன் வாழ்கூடலி லேசம ணாதிகளை
மின்னுங்கழு வேறவைத்த வேல்முருகர் விராலிவெற்பில்
நன்னயஞ்சேர் குறமாதே நதிவளப்பஞ் சொன்னதுபோல்
இன்பமாய்க் கற்றவித்தை தன்னையெல்லாம் சொல்வாயே.

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே. நீ கண்டு வந்த புண்ணிய நதிகளெல்லாம் சொல்லக் கேட்டு மகா சந்தோஷமாச்சுது, இனி, நீ கற்றறிந்த வித்தையெல்லாம் சொல்லவேணும் பெண்ணே!

ஆனால், அப்படியே சொல்லுகிறேன். கேளீரியம்மே.

(குறத்தி தான் கற்றவித்தைகளைக் கூறல்)

தரு

51. கற்றறிந்த வித்தை யெல்லாங் கேளாய்
கைகண்ட மூலிகை வகையுஞ் சொல்லுவேனே
வெற்றிவடி வேல்முருகர் விராலி நாட்டிற் சந்திர
விம்ப வதனஞ் சிறந்த மின்னே இப்போது
ஆனையைப் பிடித்துவந்து கரகத்தி லடைப்போம்—துடி
யான சிங்கந் தனைக்குரங் காட்டியே வைப்போம்
பூனைதனை புலிவடி வாகச் செய்வோம்—நல்ல
புலிகளையும் பூனையாகப் பொருந்தச் செய்வோம்
வேங்கையைப் பிடித்து மருங்கிருக்கச் செய்வோம்—நல்ல
விதமாகவே மானையிரு விழியில் சேர்ப்போம்
பாங்கான கலையைப் பிடித்திடையில் கட்டுவோம்—எங்கள்
பராக்கிரமத்தால் கரடியாட்டம் பார்த்து மகிழ்வோம்
பட்டமரந் தழைத்து தட்டிப் பால்வரச் செய்வோம்—மரப்
பாவையைச் சிரித்தின்பம் பகரச் சொல்லுவோம்
எட்டிக் காய்தனை மாங்கனியாகச் செய்வோம்—நல்ல
இரும்பையும் செம்பையும் தங்கமென்னச் செய்வோம்
தண்ணிக்குட் புகுந்துசோறு சமைத்து வருவோம்—பின்னும்
தண்ணிதனிற் கல்மிதக்கத் தானும் செய்வோம்
எண்ணமான அக்கினியி லேறி நடப்போம்—புவி

யெங்குமரைச் சணத்தில் சுற்றி யிங்கே வருவோம்
இந்திரமுதல் மயேந்திர ஜாலம் கோகரண—மோடி
எடுக்கும் வித்தை காருடங்க ளெல்லாஞ் செய்வோம்
விந்தையான செம்புக் குள்ளே பந்தைத் திணிப்போம்—
பின்னும்
வேடிக்கையாய்ச் செம்பைக் காட்டி மூடிக் கொள்ளுவோம்
பச்சையால் தனக்குமொரு பச்சிலை தந்தோம்—யாரும்
பார்க்கமூ வடியாய் இந்தப் பாரை யளந்தார்
மிச்சமான மூலிகையொன் றீசர்க் கீய்ந்தோம்—அவர்
மேருமலை யைவளைத்து வில்லாய்க் கொண்டார்
வரிசையா யனுமனுக்கொரு குளிசங் கட்டினோம்—சென்று
மனோவேக மாய்ப்போய் சஞ்சீவியைக் கொணர்ந்தார்
பரிவுட னுந்திரர்க்கொரு மந்திரஞ் சொன்னோம்—மிகப்
பறந்துதிரி கிரிகளையும் பறவாமல் செய்தார்
இணங்கா தபேர் யிணங்கவே (மூலிகை) தருவோம்—
மனதில்
எண்ணிய கருமங்கள் கண்டு இன்பமாய்ச் சொல்வோம்
குணமிகு வித்தைக ளின்னம் வேணதுண்டு—கொக்
கோக நூல்படித்து வளர்மோ இனியே கேளாய்.

[மோகினி குறத்தி வரிசை பெற்ற வகைகளை
வினவுதல்]

விருத்தம்

52. இத்தனை வார்த்தைகள் படித்துச்
சொல்பவரை இப்புவியி லெங்குங்காணேன்
முத்தமிழ்சேர் விராலி கிரியினிலனு
தினமும்வளர் முருகர் நாட்டில்
வித்தைமிகுங் குறமாதே எந்தனைப்போ
லாசை கொண்ட மின்னார்க் கெல்லாம்
உத்தமமாய்க் குறியுரைத்து வரிசைபெற்ற
வகைகளெல்லா முரைசெய் வாயே,

---

51. கரகம் - கமண்டலம், பூங்குடம், மருங்கு - பக்கம். கலை - மேகலை, காஞ்சி என்னும் இடையணிகள். பராக்கிரமம் - வலிமை, வீரம். அக்கினி -நெருப்பு. இந்திர சாலம் - மாய வித்தை மயேந்திர சாலம் - மாயவித்தைகளுள் ஒன்று. கோகரணம் - பசுப்போற் காதசைக்கும் வித்தை. மோடி - வேடிக்கை. காருடம் - அறுபத்து நாலு கலையுள் நஞ்சு தீர்க்கும் வித்தை.

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமாதே. நீ கற்றறிந்த வித்தையெல்லாம் கேட்டு மகா சந்தோஷமாச்சுது. இனி நீ அவரவர்க்குக் குறி சொன்னதும் அவரவர்கள் கொடுத்த வரிசைகளையும் விவரமாகச் சொல்லவேணும் பெண்ணே.

ஆனால், அப்படியே சொல்லுகிறேன் கேளீரியம்மே.

[குறத்தி பெற்ற வரிசைகளைக் கூறல்]

தரு

53. மதுரைமீ னாட்சிக்குச் (சொக்கேசர் இடபத்தில்)
மதிசூடி வருகுறி சொன்னேன்—முத்து
மாலையுங் கனவச்சிர ஓலையும் பொற்கம்பிச்
சேலையு மேயவர் கொடுத்தார். 1

திருமகள் சீதைக்கு இராமன் மணஞ்செய்யுந்
திறமாக வேகுறி சொன்னேன்—வளர்
செங்கைக் கடையமு முன்கை மூதாரியு
மிங்கித மாகவே கொடுத்தார் 2

ரதியெனும் மாதுக்கும் மதராசன் மணஞ்செய்ய
இதவாக வருங்குறி சொன்னேன்—நவ
ரத்தினப் பதக்கமுங் கொத்துச் சரப்பணி
முத்துத் துராய்களுங் கொடுத்தார் 3

அந்தமிகு யிந்திராணி தனக்கந்த
இந்திரன் வருங்குறி சொன்னேன்—நல்ல
அஷ்டக் கடையமுங் குத்து முலைக்கச்சும்
முத்தில்முத் தூணியுங் கொடுத்தார் 4

விந்தை யுடனரிச் சந்திரன் வருங்குறி
சந்திர மதிக்குநான் சொன்னேன்—விரல்
மெட்டியும் பசுந்தங்கப் பொட்டியு மாணிக்கச்
சுட்டியு மேயவர் கொடுத்தார் 5

சிந்தை மகிழ்தேவ குஞ்சரி வள்ளிக்கு
(சிங்காரன்) வருங்குறி சொன்னேன்—நல்ல
செம்பொற் சதங்கையும் தும்பிப் பதக்கத்தொ
டம்புலித் தாயத்துங் கொடுத்தார் 6

53. அக்கு வடம் - சங்கு மணிமாலை.

வங்களப.............. ரங் குறி
வங்கண மாகவே சொன்னேன்—நல்ல
வக்கர மணிகளும் மிக்க பொன் னாரமும்
அக்கு வடங்களும் கொடுத்தார் 7
......க்கு நிச்சய மாங்குறி
உச்சித மாகவே சொன்னேன்—பட்டுக்
கச்சையும் வெண்முத்துக் குச்சுரு மாலுடன்
கைச்சரமு மெச்சித் தந்தார் 8
(மலை) வாழும் பச்சை மயில்வடி வேலர்க்கு
வரிசை யாய்ச்செயஞ் சொன்னேன்—விராலி
மலைவா சமுஞ்சொல் லத்தொலை யாத
யோகமுங் கொடுத்தார் 9

(குறி பார்க்க வேண்டல்)

விருத்தம்

54 மின்னுநவ மணிமுடிசேர் முருகேசர்
விராலிகிரி மீதில் வாழும்
பொன்னணியுந் தனஞ்சிறந்த வஞ்சியரே
யொருவசனம் புகலக் கேளாய்
தன்மையா யவரவர்க்குக் குறியுரைத்து
வரிசைபெற்ற தன்மை போல
மன்னிமையா யெந்தனுக்கு மனமகிழுங்
குறிபார்த்து வழுத்து வாயே

(குறத்தி குறிசொல்லத் தொடங்கல்)

மறு—விருத்தம்

55. திருமருக னெனும்வடிவேல் முருகேசர்
பரவிநித்தஞ் செழிக்கு நாட்டில்
வரியுலவும் விழிசிறந்த வாலமோ
கினியேநின் மலர்க்கை பார்த்துப்
புருஷமுடன் குலதெய்வம் வேண்டிக் கொண்டு
புதுமையாய் குறிமனது பொருந்திப் பார்க்க
வரிசையுடன் வேண வஸ்த்து வகைகளெல்லாங்
கொண்டுமிக வரச்செய் வாயே.

---

55. வஸ்த்து - பொருள்கள்

(குறி பார்த்தால்)

தரு

56. தந்தனத் தான தானென தானென
ஓசத்திக் கத்தூரி யாலே மெழுகடி
உகந்த சந்தனங் கொண்டுதான்—மிக
உண்மையாய்க் கோல மெழுதடி
வசதியாக மலர்ப்பந் தலையிட்டு
வாழை கமுகு மாந்தோர ணங்களும்
வரிசை யாகவே கட்டடி
குடவயிற்று விநாயகன் பூசைக்குக்
குளிர்ந்த முக்கனி தோசை யிட்டிலி
கொண்டு வாநல்ல மோதகங்
கடலை சக்கரை யவல்பயறெள் ளுண்டை
கருத்துட னேவெகு விருப்பமாய்த்—தேங்
காய்கள் பாக்கிலை கொண்டுவா
சிங்காரமான சொர்ணக் கும்பம் வைத்து
சிறக்க நாழியில் முத்தளந்து—வை
தீப தூபமுன் காட்டியே
பொங்கமாய் வர்ணச் சேலையொன்று வைத்துப்
புஷ்ப வகைகளைத் தூவியே—மனம்
பொருந்தி வந்தனை செய்யடி
எந்தன்கையில் பிரம்புக்கோர் காணிக்கை
யின்ப மாகவே கொண்டுவா—குறி
யென்னமாய்ப் பார்த்து சொல்லுறேன்
நன்றாய் வீர வாகுதேவர்
அகோர மாகவே வருகிறார்—பூசை
யன்புடன் செய்து கும்பிடு
கடினமாகக் கருப்பன் வருகிறான்
கருத்துடன் நாளும் விருப்பமாய்—வைத்து
(கடவுளைநீ) வேண்டிக்கோ
துடினமான ரணவீர பத்திரனைத்
தொழுது பூசையிட் டொருமையா
யொருசுக் [கானரி] கொண்டுவை

---

56. மோதகம் - அப்பவருக்கம், கொழுக்கட்டை, கிடா - ஆண் ஆடு, வங்கணம் - காதல் குஞ்சு - கூந்தல்.

உக்கிர மாமெய்க்க நாச்சியம் மாளுக்கு
உகந்த சாவலுங் கிடாயும்—வெட்டியே
உண்மையாய்ப் பூசை போட்டு
மிக்க வேவளர் கன்னி யெழுவர்க்கும்
விருப்பமாய்ப் பச்சைப் பாளைமுப்—பழமும்
விதமுடன் வைத்து வேண்டிக்கோ
தீர்க்க மாக வளரய்ய னாருக்கு
சிறக்குங் குதிரைக ளெடுத்து—வைத்து நீ
நிரக்கப் பூசனை செய்யடி
மூர்க்க மாயொரு மங்கிலியக் காரி
முன்னே வந்து தடுக்கிறா—ளொரு
முத்து வர்ணக்கலை கொண்டுவை
இன்பமாய் எந்தன் வங்கணச் சிங்கனுக்
கேற்ற கொங்கணிக் கச்சைதான்—மிக
எடுத்து வந்தெந்தன் முன்னேவை
அன்புட னெந்தன் குஞ்சுக்குச் சிக்கெண்ணை
அள்ளி யேமிகக் கொண்டுவா—குறி
யறிந்து சொல்லுறேன் கேளம்மே
தனதனத்தன தானன தானன

(மோகினி தன்மனக்குறி வேண்டல்)

விருத்தம்

57. சதுர்முகனை யோதிவைத்த முருகேசர்
விராலிகிரி தன்னில் வாழும்
அதிரூப மானகுற வஞ்சியே
ஒருவசனம் அன்பாய்க் கேளாய்
இதவுடன்நீ சொன்னவஸ்த்து வகைக
ளெல்லாங் கொண்டுவந்தே யின்பமாகத்
துதிசெய்குல தெய்வத்தை வேண்டியெந்தன்
மனக்குறியைச் சொல்லு வாயே

---

57. சதுர்முகன் - பிரமன்.

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே, நீ கொண்டு வரச் சொன்ன வஸ்துக்களெல்லாங் கொண்டு வந்தேன். இனி உங்களுட குலதெய்வங்களை வேண்டிக் கொண்டு என் மனதில் நினைத்திருக் கிற குறியைச் சொல்லும் பெண்ணே.

ஆனால் அப்படியே எங்களுடைய குலதெய்வத்தை வேண்டிக் கொண்டு சொல்லுகிறேன். கேளீரியம்மே

(குறத்தி மோகினியின் மனக் குறி சொல்லுதல்)

அகவல்

58. நீருறை கமலம் நிறைந்தபொன் மகளே
சீர்வளர் மதுரைச் செழிக்கும்மீ னாட்சி
காந்தி மதியெனுங் கருணா கடாட்சி
சேந்தனைப் பெற்ற சிவகாமி யம்மே
அங்கயற் கண்ணி அகிலாண்ட தேவி
இங்கித மாக இலங்குகா மாட்சி
வளர்விசா லாட்சி மகாபூத னாட்சி
யேழ்மையாய் வளரும் எக்கால தேவி
தரணியோர் புகழும் தையல் நாயகி
(வரமெலாங்) கொடுக்கும் மட்டுவார் குழலி
செகதலம் புகழும் செல்லாண்டி யம்மா
அகமகிழ் லட்சுமி ஆயிமா காளி
மாரிமுத் தாயி... ... ...
பேருடன் வளரும் பெரியநா யகியே
வீரமா மலையில் விளங்கும் கன்னியரே
பார்புகழ் மாவைப் பதிவளர் கருப்பா
(அரிமிசை) அமரும் அய்யனா ரப்பா
ஊனையூர் தன்னி லுகந்த சாஸ்த்தாவே
உள்ளூர் பிடாரி ஓங்கார தேவி
வள்ளிதெய் வானை வடிவேல் முருகா
முள்ளடிக் கருப்பா முருங்கமா முனியே
மின்னியே வளரும் வீரபத் திரனே
ஓங்கி யமர்ந்தோர் ஊரய்ய னாரே
பாங்குடன் வளர்திருப் பாண்டியீஸ் வரரே
பண்புடன் விரா லூர்ப் பதியீஸ் வரரே

---

58. சேந்தன் - முருகன்

வண்மைசேர் மாயா வடுகவை ரவனே
சித்திவி நாயகா செல்வக் கணபதி
அத்திமா முகனே ஐந்துகைய் யோனே
யாவரும் வந்து அன்புடன் கூடித்
தெய்வக் குறத்திநான் செப்பிய வார்த்தை
பழுதுவ ராமலென் பக்கத்தி லிருந்து
வளமிகு செல்வி வாலமோ கினியாள்
கருத்தினில் நினைத்த காரியங் கண்டு
வருக்கமாய்ச் சொல்லும் வரந்தரு வீரே

அகவல் முற்றும்

வசனம்

இப்படி குலதெய்வத்தை வேண்டிக் கொண்ட குறத்தியுடன் மோகினி வருகிற விதம்-பராக்கு.

(மோகினி வருகை)

தரு

59. செண்டு முலை யிரண்டு மின்ன—தண்டை கலீன் கலீலென்ன
வண்டுநிகர் குறவஞ்சிமுன்—மோகினி வந்தாள்

(குறத்தி மோகினியின் கை பார்த்தல்)

கஞ்சமல ரிலங்குமுந்தன்—கைபார்க்க வராய்
கனகரத்தினத் கொடிபுனையுங்—கைபார்க்க வராய்
அன்னமேயுன் னுடையகை—செல்வக் கையே
அழகுமண வாளன் தன்னை—அணைத்து வாழும் நின்கை
சொர்ணநவ ரத்தினங்களும்—சொரிந்தருளும் நின்கை
துலங்கிவளர் தெய்வந் தன்னை—துதித்தருளும் நின்கை
அந்தணர்க்கும் யாசகர்க்கும்—அருளுதவும் நின்கை
அனங்கொடுத்து யாவரையும்—ஆதரிக்கும் நின்கை
செந்தமிழ்சேர் வாணருக்குஞ்—செல்வந்தரு நின்கை
செழித்து வளர்ந்தருளுஞ்—சிறந்திலங்கு நின்கை
வந்தவர்க் கெலாமதிக—வாழ்வுதரு நின்கை
வாஞ்சைடன் வீணை வைத்து—வாசிக்கும் நின்கை
சிந்தையுடன் கனவரிசை—செய்தருளும் நின்கை
செகமுழுதும் அதிக செங்கோல்—செலுத்தி வாழும் நின்கை

(குறத்தி மோகினியின் கைரேகை பார்த்தல்)

கனமான உன்னுடைய கையில் நல்லரேகை
கனமான தனரேகை கதித்த செல்வ முண்டா
மின்னும் சங்கரேகை இந்தரேகை நல்ல
சனங்களுனைப் பணிய விளங்கிவாழ்வா யம்மே.

பொங்கமாகப் பின்னும் பத்மரேகை யிருப்பதனால்
புவியிலிந்தி ராணிசெல்வம் பொருந்தி வருமம்மே,
இங்கிதம்சேர் மச்சரேகை யிருப்பத னாலே
இலங்கு பூஷண வகைகளெல்லாஞ் சேரு மம்மே
மிக்க தமருக ரேகை விளங்கியிருப் பதனால்
மிகுந்த வித்தை யுன்னிடத்தில் மேன்மையுண்டா மம்மே
சக்ர ரேகை கைத்தலத்தில் தரித்திருப்ப தாலே
தரணியெங்குமொரு குடைக்குட் தானாள் வாயம்மே
அன்னரேகை உன்கரத்தில் மின்னுவதனாலே
அன்னதான மெந்நாளு மதிகஞ் செய்வா யம்மே
தன்மையாய்ப் புத்திரரேகை தழைத்திருப்ப தாலே
சகலகலை யறிந்தபுத்திர சம்பத்துண்டா—மம்மே.
அந்தமான வித்தைரேகை அடுத்திருப்ப தாலே
அழகுமண வாளன்றனை அணைந்து வாழ்வா யம்மே

இந்தபூ ரணரேகை யிலங்கி யிருப்பதனால்.
இந்திரனிந் திராணிபோல் என்றும் வாழ்வா யம்மே

அரன்மகிழும் உமைகரத்தி—லன்ன ரேகை யுண்டு
வரமுதவும் மலர்லஷ்மிக்கு மச்ச ரேகையுண்டு
தரை புகழும் வித்தை ரேகை—சரஸ்வதிகை ரேகை
தழைத்துவளர் சக்கிர ரேகை—ஸத்யபாமைக் குண்டு
சீரிலங்கும் பத்மரேகை—சீதைகையிலுண்டு
செழிக்குமிந்தி ராணிகையிற்—சிறக்குந்தன ரேகை
பேரான ரேகையல்லா—முனக்கிருப்ப தாலே
பிரபலமாய் அவர்களைப்போல் பேர்பெறுவா யம்மே.

---

59. கஞ்சமலர் - தாமரை மலர். சொர்ணம் - தங்கம். அனம் - அன்னம், உணவு. வாஞ்சை - ஆசை, பிரபலம் - புகழ்.

(மோகினி தன் மனக்குறி பார்க்க வேண்டல்)

விருத்தம்

60. எந்தனுட கையிலுற்ற ரேகையெல்லாம்
கண்டுரைத்தாய் இன்ப மாக
சுந்தரஞ்சேர் விராலிகிரி மீதில்வளர்
குறமாதே சொல்லக் கேளாய்
சிந்தையில்நான் நினைத்திருக்குங் குறிகளெல்லாம்
நன்றாகத் தெளிந்து பார்த்து
விந்தையுட னறிந்துமின்ன குறிகளென்று
தானுமிக விள்ளு வாயே.

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே, என் கையிலுள்ள லட்சணமெல்லாங் கண்டுரைத்த தெய்வக் குறத்தி நீயே. இனி என் மனத்திலுள்ள குறிகளை இன்னதென்று சொல்லும் பெண்ணே.

மறுவசனம்

ஆனால், அப்படியே உன்னுடைய கையிலுள்ள குறிதனை யின்னதென்று வகை விபரம் சொல்லுகிறேன், கேளீரியம்மே.

ஒரு நட்சத்திரம் சொல்லீரியம்மே
திருவோண நட்சத்திரம்
ஒரு இராசி சொல்லீரியம்மே
மகர ராசி
ஒருபூச் சொல்லிரியம்மே
கடப்பம் பூ
ஒருமலை சொல்லீரியம்மே
விராலிமலை
கண்டுண்டேன் கண்டுண்டேன்
கண்டுண்டே னரீயம்மே.

(குறத்தி குறி கூறுதல்)

தரு

61. மானே உனது நினைவெல்லாம் கண்டு
நானே சொல்லுகிறேன் கேளும்
விராலி மலையில் வேலர் மீதிலுனக்கு
மையல் காணு தம்மே. 1

திருவோண நட்சத்திர மென்ற
சீரை யெண்ணிப் பார்க்க
உன்னுடைய சிந்தைக் குகந்த கந்தனைக்
கூடிச் சேரத் தோணுதம்மே. 2

ராசி மகர மென்று சொன்னமக
ராசியைக் குறிபார்க்கும் வேளை
நேசமாய் கந்தர் மீதி லுனக்கு
ஆசை காணு தம்மே 3

கடப்பம்பூ வென்றுசொன்ன வார்த்தையைக்
கருத்திலெண்ணிப் பார்க்கும் வேளை
கந்தர்மீ திலுனக்கு மிகுந்த
காதல் காணு தம்மே. 4

மகிழ்ந்துவி ராலி மலையைச் சொன்ன
மலையைக் குறி பார்க்க வந்த
மலையில் வேலர் மார்பில் கடப்ப
மாலையைக் கண்டு வாடுதம்மே. 5

வானவர் சிறைவிடுக் குந்தே வனவர்
வாக்கருள் கொடுக்குந் தேவன்
வடிவே லாயுத முருகர் மயில்மேல்
வரவு காணு தம்மே. 6

(மோகினி தன் உயிர்த் தலைவனை அடைவது எப்போது என வினவுதல்)

வசனம்

அகோ வாரும் பெண்ணே, குறமகளே, வானவர்கள் தம்பிரானான மயில்வாகனக் கடவுள்மீதிலாசை கொண்ட குறியைக் கண்டு சொன்னதினாலே நீ தெய்வக் குறத்தி யென்கிறதுக்கய்யமில்லை. ஆசை தந்த பிராண நாதனைக் கலந்து, கூடவருவதெப்பச் சொல்லும் பெண்ணே.

(குறத்தி சகுனம் பார்த்து கூறல்)

தரு

62. வருவதெப்ப வென்று முந்தன் வாய்திறக்கு முன்னே
வலத்தில் கன்னி தும்மல் வாக்காய்க் காணு தம்மே
பரிவாசல் கவுளி மெத்தப் பதறுதடி யம்மே.
பக்கச்சொல் வந்தா ரென்று பகருதடியம்மே.

காகம் வந்து ஆளவரத்தில் கதறுவதி னாலும்
கதித்த சங்குத் தொனிமுழங்கக் காணுவதினாலும்
வாகுபெயர் கனவடி வேல்முரு கேசன்
வந்தார் வந்தாரென் றிப்பமதித்து சொல்லுதம்மே.

(பாங்கி மாலை பெற்று வருதல் மோகினி மகிழ்தல்)

சந்தோஷமாய்ச் சகுனஞ் செயந்தனிற் பாங்கி
சண்முகவர் மார்பின் கடப்பந்தார் வாங்கியே
வந்தாள் வந்ததிருக் கடப்பமலர் மாலைதனைக்
கரத்தில் வாங்கி நன்றாக மனமீறி மிகமகிழ்ந்தாள்.

(மோகினி குறத்திக்குப் பரிசளித்தல்)

தரு

63. மகிழ்ந்து மாலிகைதனை மலர்க்கண்ணில் வைத்து
முலைமார்பி லணைத்து மெத்த மனமீறி
மகராச யோகமெல்லாம் வந்ததென் றின்பமாக
மாது மோகினி நல்ல வாஞ்சையுடன்
குறிதனைக் கண்டுரைத்த குறவஞ் சிப்பெண் மனதுக்
குளிர் சந்தனம் பூசிக் கொண்டாடிப்
பிரியமுட னேநல்ல பீதாம் பரமும் வர்ணப்
புடவை சாலுவைகளும் பேரான ஆடை
யாபரண மெல்லாம் அதிகவெகு மானஞ்செய்
தழகாய் நவமணி களழுத் தியபொற்
கூடையுஞ் சிங்கனுக்குக் கொங்கணிக் கச்சைகளும்
கொடுத்துக் குறத்திதனை அனுப்பி வைத்தாள்.

சிங்கன்

விருத்தம்

64. மிக்கசல் லடந்தரித்துக் கச்சை கட்டி
மெய்தனில்பூ ஷணங்களெல்லாம் மின்னி யேதான்
கொக்கிறகைச் சிகைமீதில் சூடிக் கொண்டு
குளிர்ந்தசவ் வாதணிந்து குருகு சேர
அக்கண்ணிக் கோர்வையெல்லாந் தோளில் போட்டுச்
சண்முகவர் விராலி கிரிதன் நாட்டில்
தொக்குடனே குருகினங்கள் வேட்டை யாடத்
துடியான குறச்சிங்கன் தோன்றி னானே.

---

62. கவுளி - பல்லி.
64. சல்லடம் - குறுங்காற்சட்டை. சிகை-குடுமி. மயிற்கொண்டை

(சிங்கன் வருகை)

தரு

65. சிங்கன் வந்தானே ·துரைக்குறச்
சிங்கன் வந்தானே

சங்கரி யீன்றருள் பாலனு மாகிய
சண்முக வேலர் தழைத்திடு நாட்டினில் சிங்கன் 1

முண்ட விழியு முறுக்கிய மீசையு
முட்டிக்கால் தட்டியே மொண்ணை மூக்குச் சிங்கன் 2

பேழ்கண்ணி தாக்கிப் பெருத்த வயிறுடன்
வாழ்த்திடு கொண்டை மலரசைந் தாட சிங்கன் 3

வேறு—தரு

66. கொண்டையில் கொக்கிற கைச்சூடி
வண்டத் தினம்போம் துஷ்ட மதப்பயல்
சிங்கனுந் தோன்றினானே
கள்ளுகுடித்து வெறிதாக்கி யெழுந்தா னெடுத்து
வெள்ளைப் பல்தன்னைக் காட்டி நல்லவேடிக்கைச்
சிங்கனுந் தோன்றினானே
வானவர் மன்னும் விராலிமலை
வடிவே லவர்திரு நாட்டில்
தேன்மொழி சிங்கிதனைத் தேடிச்
சிங்கனும் வந்து தோன்றினானே

(சிங்கன் கூற்று)

விருத்தம்

67. மிக்கவே விளங்கு கீர்த்தி
விராலியில் வேலர் நாட்டில்
திக்கல்வாய்ச் சிங்கன் காணச்
சிங்கத்தின் குட்டி போலப்
பக்குடன் பறவைக் கெல்லாம்
பாங்குடன் கண்ணி குத்திக்
கொக்குகள் சிங்க னுக்குங்
குளுவனும் நான டய்யே

---

65. பேழ் - பெருமை. பக்கு - மரப்பட்டை.

தரு

68. சிங்கனும் நானே—மதப் பயல்
சிங்கனும் நானே
சிங்கனும் நானே சிறந்து வளர்ந்து
சுகந்த மழிந்து மிகுந்து மகிழ்ந்து
நிறைந்து பொருந்தி யிருந்துறு கந்தருக்
குகந்த விராலி நலந்தரும் நாட்டினில் சிங்கனும் நானே 1
மிக்க செந்நெல் பயிரிட்ட வயல்களடுத்து
மிகுந்த கயல்களை மொக்கிய கொக்கொடு
பக்கிகளைக் கருதிக் கண்ணி குத்தி
யகப்பட வைத்துப் பிடிக்கிற சிங்கனும் நானே 2

(புள் வரவு கூறல்)

கலிப்பா

69. மன்றலந்தா ரசையநட மாடிவந்த சிங்கனுந்தான்
நன்றிதரும் விராலிகிரி நாட்டில் வயற்குளத்தில்
துன்றுங் கயலினத்தைத் தொனியாயிரை பாய்ந்து கொத்தி
தின்றுவந்து சேர்குருகின் சேனைதனைக் கண்டானே.

கண்ணி

தரு

70. கண்டன டய்யே-பறவைகள்
கண்டன டய்யே
விராலியில் வேலர் கருத்து மகிழும் குறிஞ்சி வயல்தனில்
மண்டிய கொக்கும் பவளக்கால் நாரையும்
மானங் கவர்ந்தெதிர் வந்தது போலவே
(கண்டன டய்யே)

71. வருகு தய்யே-பறவைகள்
வருகு தய்யே
வருகுதய்யே விராலிகிரியின் வடிவேலர் மரக்குடி
வயல்தன்னில் கருநிற நாரையுஞ் செந்நாரை
வெண்ணாரை கம்புகம் புள்ளினங்களும் கும்பு கும்பாகவே
(வருகுதய்யே)

72. சேரு தய்யே-பறவைகள்
சேரு தய்யே

சேரு தய்யே விராலியில் வேலவர்
செழித்து மருகுங் குளத்து வயலுக்குள் (சேருதய்யே)
தாராவு மன்றிலுங் கூழைக் கிடாக்கொக்குஞ்
சச்சுங் கிச்சுமொரு மிச்சு மொச்சுக் கொண்டு (சேருதய்யே)

73. மெய்யினு மய்யே-இனங்குடி
மெய்யினு மய்யே

மெய்யினு மய்யே விராலியில் வேலவர்
வேடிக்கை சொற்...பாடிக் குளத்தினில்
சாயுங் கொக்குத் திரள்பாயுங் கல்லதனைத்
தத்திக்கொத்தி விக்கிக் கிக்கீ கிக்கீ யென்று (மெய்யினு மய்யே)

74. கெம்பார டய்யே-பொருபொரு
கெம்பார டய்யே

கெம்பார டய்யே விராலியில் வேலர்
சேருங் கதித்த குடிவயல் தன்னிலே
கும்பு கும்பாகவே உள்ளானுந் தாரவுங்
கொக்குமென் கண்ணிக்குள் சிக்கிக்க வருகுது 1

கெம்பார டய்யே விராலியில் வேலர்
கெடிசேரு தென்னங் குடிவயல் தன்னிலே
சம்பான் கோழியுங் கூழைக் கிடாக்கொக்குஞ்
சாரி சாரி யாகத் தானும் வருகுது 2

கெம்பார டய்யே-பொருபொரு
கொம்பார டய்யே

75. சிக்கிச்ச டய்யே-பறவைகள்
சிக்கிச்ச டய்யே

சிக்கிச்ச டய்யே விராலியில் வேலவர்
சீராய் வளர்கிழைத் தோர வயல்தனில்
கொக்குட னாரை புறாக்கவு தாரியுங்
கூழைக் கிடாக்கொக்குங் கொள்ளை கொள்ளையாக

சிக்கிச்ச டய்யே-பறவைகள்
சிக்கிச்ச டய்யே

விருத்தம்

76. திருத்திய கண்ணி தன்னில்
சிக்கிய பறவை யெல்லாம்
கருத்துட னெடுத்து வந்து
கறிசமைத் துண்ண வேண்டி
உருத்துடன் சிங்கி தன்னை
உகந்துகா ணாமற் தேடி
வருத்தமாய்ச் சிங்கன் தானும்
மனமிக வருந்து வானே.

(சிங்கன் சிங்கியைத் தேடல்)

தரு

77. சிங்கியைக் காணேனே-என்வங்கணச்
சிங்கியைக் காணேனே

சிங்கியைத் தேடிநான் எங்கும் காணாமலென்
சிந்தை மயங்கி யுருகுது
பொங்க மிகுந்திடு மங்கையர்க் கேகுறி
சிங்கார மாய்ச்சொல்லி எங்கே யிருக்காளோ (சிங்கியைக்)
கச்சுமுலை யிரண்டும் பச்சிள நீரென
மெச்சி மிகமகிழ்ந் திச்சையாய்த் தானெவர்
கட்டழகி தன்னைக் கிட்ட வழைத்துத்தான்
சட்டவாய்க் கூடியே கட்டிச் சுகித்தாரோ (சிங்கியைக்)

வேறு - தரு

78. சிங்கிக் கடையாளஞ் சொல்லுறேன் கேளுங்க டய்யே-அவள்
செண்டுமுலை யிரண்டும் பந்து தழுவும்
....ய்யே—நல்ல
சித்தசன் மோகம் வைத்த சையோக
மெத்தவை போகம் உற்ற சொல் பாகம் (சிங்கிக்) 1

செக்கச் சிவந்த திரண்ட குமரிய டய்யே - அவள்
தீர்க்கமு மார்க்கமும் ஆர்க்கும் வராது காணய்யே-வளர்
சின்ன யிடையாள் மின்னு துடையாள்
அன்ன நடையாள் பின்னு சடையாள் (சிங்கிக்) 2

---

78. பக்கி - பட்சி, பறவை

செந்திரு மேவும் விராலி முருகய்யர் நாட்டில் - வளர்
தேன்மொழி மாதர்க் கெல்லாங் குறிசொல்லும் சீமாட்டி
- நல்ல
சிந்துரந் தீட்டிச் செவ்விழி மீட்டிச்
சொந்தம் பாராட்டித் துலங்கு கண்ணாட்டி (சிங்கிக்) 3

கலிப்பா

79. மதிமயங்கி யிப்படித்தான் வருந்துகின்ற சிங்கன் முன்னே
துதிபரவும் மயில்முருகர் துலங்குந் திருநாட்டில்
அதிகவடி வானபெண்கள் அங்கன்பாய்க் குறியுரைத்து
இதவுடனே சிங்கியுந்தா னின்பமுடன் வந்தாளே.

ஏசல் - தரு

80. இந்நேரந் தானும்நீ யெங்கே யிருந்தாயென் சிங்கி - நான்
எங்கே யிருந்தாலும் நீசெய்வ தென்னடா சிங்கா.

செய்வதென்ன வென்று தீராட்டம் பேசாதே சிங்கி - சும்மா
தீராட்ட முன்னுடன் பாராட்ட லாகாதே சிங்கா.

பாராட்ட லாமென்று பாசாங்கு பேசாதே சிங்கி - அந்த
பாசாங்கு செய்வதுன் சாதித் தொழிலடா சிங்கா.

சாதி பேதமாய்ச் சாதனை செய்யாதே சிங்கி - அந்தச்
சாதனையுஞ் சூதுந்தா னுனக்கு வருஞ் சிங்கா.

வருவதென்ன வுந்தன் மார்க்க மறிவேனான் சிங்கி - ஆர்க்கு
மடியில் கனங்கொண்டால் வழியில் பயமுண்டு சிங்கா

வாதினை வித்தை வகையடி யாதடி சிங்கி - சும்மா
யேதுக்கு ஆழமும் நீச்சுந்தான் காட்டுறாய் சிங்கா.
பேச்சுக்கெல் லாமொரு ஆட்சேபம் பேசாதே சிங்கி - உனக்கு
வாச்ச அடிமைமுறி கொடுத்த துண்டோ சிங்கா.
உண்டானால் கொஞ்சத்தி லுன்னை விடுவேனோ சிங்கி
- சும்மா
வண்டத் தினமாக வாய்மதம் பேசாதே சிங்கா.

கொண்டையைச் சொருகின்ற கொத்துச் சல்லியேது சிங்கி
- வடக்குச்
சீமையில் பெண்தந்த முத்துத் தொங்கலடா சிங்கா.

---

79. பொங்க - பொலிவு.

நெற்றிமேல் செய்யாளை நீளவிட் டணிவானேன் சிங்கி-மயல்
நிறையும் பாங்கிதரு ரத்தினச் சுட்டிகாண் சிங்கா

வட்டநுதல் தனிலிட்ட கரியேது சிங்கி - நல்ல
வங்காளப் பெண்தந்த பொங்கச் சவாதடா சிங்கா

துத்திப்பூ வைமூக்கில் வைத்த விதமென்ன சிங்கி -மிஞ்சு
சுகமான ரதிதரு மூக்குத் தளுக்கடா சிங்கா.

காதினில் சூரிய காந்தப்பூ வேதடி சிங்கி - புகழ்
கதிக்குமிந் திராணி கொடுத்த ரத்தினத்தோடு சிங்கா

காக்காய்ப் பொன் பட்டத்தை யழுத்தி யணிவானேன்
சிங்கி-நல்ல
கச்சி மின் னார்தந்த வச்சிர கண்டசரி சிங்கா

சங்கங் கணிக்கோர்வை கொங்கை மீதிலணிவானேன் சிங்கி -
எங்கள்
சரசமோ கனப்பெண் தருமுத்துத் தாவடஞ் சிங்கா

முள்ளிப் பழக்கோர்வை முலைமீதி லணிவானேன்-சிங்கி
-எங்கள்
மோகன மோகினி தந்த மோகன மாலைகாண் சிங்கா.

கைதனிற் சுண்டைக் கனிக்கோர்வைக் கட்டேது சிங்கி-எங்கள்
காதல் மோகினிதருங் கைக்கட்டுப் பவளங்காண் சிங்கா

மஞ்சநூ லைப்பின்னி மார்பி லணிவானென் சிங்கி - விராலி
மலைமுரு கேச ரருளுஞ் சரப்பணி சிங்கா.

தனத்தைக் காவித்துணி தன்னாற் கட்டுவானேன் சிங்கி
- தெய்வானை
தருசந்திர காவிச் சரிகை ரவுக்கைகாண் சிங்கா

இடைதனில் அஞ்சுகத் தைச்சேர்த் துடுப்பானேன் சிங்கி-புகழ்
எங்களின்ப மோகினி மெச்சித் தருபச்சை யாடைகாண்சிங்கா.

வெண்டையந் தனைக்காலில் விதமாய் அணிவானேன் சிங்கி
-புகழ்
மீறுமோ கினிதந்த வெள்ளிச் சிலம்படா சிங்கா.

காலில் கிலுகிலுப்பைக் காயைச் சேர்த்தணிவானேன் சிங்கி -
மயல்
கதிக்குமோ கினிதந்த காலிற் சதங்கைகாண் சிங்கா.

புகழ்சேர் விராலிநகர் மாதர்க்கே குறிசொல்லி - நல்ல
சுகமாய் எனக்கென்ன வரிசை கொண்டு வந்தாய் சிங்கி

சாலுவை கொங்கணிப் போர்வை வயும் வெண்பட்டுச்
சல்லடங் கச்சைச் சரப்பணி முத்துத் துராயுமே
லுமையாள் பதக்கமு மங்குச் சுருமாலும்
உனக்கு வேண்டும் பணமுமிகவுங் கொண்டுவந்தேன் சிங்கா.

உன்னைச் சபாஷியென்று உகந்துநான் மெச்சுவேன் சிங்கி-நானுன்
தன்மையாய் உன்மேல் ஆசைவைத் தேண்டா சிங்கா.

இந்திர னடிமைமுறி யுனக்குத்தாறேன் சிங்கி-நானும்
உனையல்லா லினிவே றொருவரை வேண்டேண்டா சிங்கா.

திருமகள் சேரும் விராலி முருகையர் நாட்டில் - நல்ல
வரிசையாய்க் குறம்பாடி மகிழ்ந்துகூத் தாடுவோம் சிங்கா.

கூத்தாடிக் கள்ளுக்குடித்து மகிழ்வோஞ் சிங்கி - நன்றாய்
வாய்த்த ரதியும் மதன்போலுஞ் சேருவோம் சிங்கா.

இந்திரனிந் திராணிபோ லின்பம தாகவே கூடி - என்றுஞ்
சொந்தம தாகச் சுகித்தூழி வாழுவோஞ் சிங்கா.

(வாழி)

விருத்தம்

81. செங்கமலத் திருமகளெந் நாளும் வாழி
 தேவர்களும் முனிவர்களும் செழித்து வாழி
இங்கிதஞ்சேர் கலைமகளும் புவியும் வாழி
 இறையவனும் பார்வதியும் இலங்கி வாழி
பொங்கமிகு சதுர்வேத மந்திரமும் வாழி
 புண்டரீக மாலயனும் பொருந்தி வாழி
மங்களஞ்சேர் விராலிகிரி முருகர் வாழி
 வள்ளிதெய் வானையென்றும் வாழி தானே.

(மங்களம்)

82. மங்களஞ் செய மங்களம் - நித்தியசுப
மங்களம் மங்களம்.
சூரைவென்ற வடிவுடைய வீரனுக்கு மங்களம்
மகிழ்வு பெறு தீரனுக்கு மங்களம்
கயிலாச வாசரருள் குமரனுக்கு மங்களம்
கடப்பமலர் தாரனுக்கு (செய மங்களம்)

சீலமறை வாணர்புகழ் சேரும்புவி நீதனுக்கும்
கோலமலர் பாதனுக்குங் குமரனுக்கும்
நீலமயில் ஏறிவரும் நிறைந்தருளும் வேதனுக்கும்
ஞாலம் புகழ் விராலிகிரி நாதனுக்கும் (செய மங்களம்)

திருமருவு மாறுமுக விலாசனுக்கும்
மருவுயரும் விராலிகிரி வாசனுக்கும்
பெருமைதரு நேசனுக்கும் பிரபலவுல் லாசனுக்கும்
வரிசையுடன் வளருமுரு கேசனுக்கும் (செய மங்களம்)

நித்திய சுபசெய மங்களம்.

ஐங்கரத் தானைக்கு மிங்கித மானுக்கும்
மங்கைதெய் வானைக்கும் மங்களம்
செங்கை யிலங்கிய திருவடி வேலர்க்கும்
மங்களம் கந்தர்க்கும் மங்களம்.

சேபானம்

83. அயிலேந்தும் வேலனுக்கும்
அரனருளும் பாலனுக்கும்
மயிலேறுஞ் சீலனுக்கும்
வள்ளிபுணர் வேலனுக்கும் - சோபனமே

கங்கையருள் குமரனுக்கும்
கடப்பமலர்த் தாரனுக்கும்
துங்கமயில் வீரனுக்கும்
சூரைவென்ற தீரனுக்கும் - சோபனமே

தொண்டர்க்கருள் நேயனுக்கும்
துலங்கு வச்சிர காயனுக்கும்
அண்டர்கள்ச காயனுக்கும்
அருமறைசேர் தூயனுக்கும் - சோபனமே

நற்றமிழ்சேர் வாசனுக்கும்
நாதர்க்குப தேசனுக்கும்
வெற்றிமயி லேசனுக்கும்
விராலிமுரு கேசனுக்கும் - சோபனமே.

விராலிகிரி குமரகுருபரன் துணையாக ரட்சிக்க வேணும்.

(முற்றும்)

பாடல் முதற்குறிப்பு

எண் : பாடல் எண்

அருஞ்சொற்கள்

எண் : பாடல் எண்

துணைநூற் பட்டியல்

1. அபிதான சிந்தாமணி—ஆ. சிங்காரவேலு முதலியார்.
2. கடவுளின் வடிவங்கள்—சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராம கிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை—639115, 1975.
3. கழகத் தமிழ் அகராதி.
4. சிற்றிலக்கியச் செல்வங்கள்—ந வீ. செயராமன். மணிவாசகர் நூலகம், சிதம்பரம். 1967.
5. குறவஞ்சி—டாக்டர் முத்துச் சண்முகன், நிர்மலா மோகன், முத்துப் பதிப்பகம், மதுரை—625 019, 1977.
6. முருகவேள் பன்னிரு திருமுறை - திருப்புகழ், தொகுதி - 2 - 4 உரையாசிரியர் - வ.சு. செங்கல்வராயப்பிள்ளை.
7. முருகன் உறைவிடங்கள் - புலவர் சி. முத்துப்பிள்ளை. தணிகைப் பதிப்பகம், சென்னை—1. 1973.
8. Bulletin of the Government Oriental Manuscripts Library, Madras. Vol, XII - No: 1,2. 1 959.

எமது வெளியீடுகள்

1. மறைமலை அடிகள் பிள்ளைத்தமிழ் — ரூ 6-00
   கவிஞர் சி. அன்பானந்தம்
2. அபிராமி அந்தாதி (விளக்கவுரையுடன்) — ரூ 6-00
   பேராசிரியர் ந. இராமநாதன்., எம். ஏ., பி, ஓ. எல்.
3. மதுராபுரி அம்பிகை மாலை — ரூ 1-00
4. கம்பன் இலக்கிய உத்திகள் — ரூ 32-00
   டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
5. இராமசாமி செட்டியார் ஆயிரம் பிறைவிழா மலர்
6. கறுப்பண்ண சாமி சதகம் — ரூ 6-00
   பதிப்பாசிரியர் : டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்



மெய்யம்மை பதிப்பகம்

காரைக்குடி - 1 சென்னை – 14